07.12.15

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

## போரூர் ஏரிக்கு நீர்வரத்து அதிகரிப்பு

போரூர் ஏரிக்கு நீர்வரத்து அதிகரித்துஉள்ளதால், சென்னை பை-பாஸ் சாலையில், போக்குவரத்து முடங்கும் அபாயம் நிலவுகிறது. சென்னை கோயம்பேட்டில் இருந்து பல்வேறு மாவட்டங்களுக்கும் செல்லும், அரசு மற்றும் தனியார் பஸ்கள், சென்னை பைபாஸ் சாலையை பயன்படுத்தி வருகின்றன. வெளிமாநிலங்களில் இருந்து சென்னை துறைமுகம் வரும் சரக்கு வாகனங்களும், இச்சாலையை பயன்படுத்துகின்றன.

போரூர் ஏரியின் குறுக்கே, மேம்பாலம் கட்டப்பட்டுள்ளது. ஏரியின் கரையை ஒட்டி, மவுண்ட் - -பூந்தமல்லி நெடுஞ்சாலை உள்ளது. கடந்த, 10 நாட்களுக்கு முன்பு நிரம்பிய போரூர் ஏரியில் இருந்து உபரிநீரை வெளியேற்றும் பணியை, பொதுப்பணித்துறையினர் மேற்கொண்டுள்ளனர். இருப்பினும், கடந்த 1ம் தேதியன்று பெய்த கனமழையால், சென்னை பைபாஸ் சாலை மற்றும் மவுண்ட் - பூந்த மல்லி சாலையில், வெள்ளம் சூழ்ந்தது. இதனால், போக்குவரத்து முடங்கியது.

மழை நின்றதால், வெள்ளம் சற்று வடியத் துவங்கியது. இந்நிலையில், மீண்டும் துவங்கியுள்ள மழை காரணமாக, ஏரிக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளது.

இதனால், ஏரி நீர் மீண்டும் சென்னை பைபாஸ் சாலையில் தேங்க துவங்கியுள்ளது. இதனால், போக்குவரத்து பாதிக்கும் சூழல் உருவாகி உள்ளது. மழை தொடரும் பட்சத்தில், மவுண்ட்- - பூந்தமல்லி சாலையிலும், போக்குவரத்து முடங்கும் அபாயம் நிலவுகிறது.

பெரியாறு அணை இன்று நிரம்பும்



கூடலுார்:முல்லைப் பெரியாறு அணை நீர்மட்டம் சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக்குப்பின், இரண்டாவது முறையாக இன்று 142 அடியை எட்டுகிறது. 142 அடிக்கு மேல் தேங்கும் நீர் வீணாக கேரள பகுதிக்கு திறந்து விடப்படுவதை தவிர்க்க, தமிழகப்பகுதிக்கு இன்று முதல் கூடுதல் நீர் திறக்க தமிழக பொதுப்பணித்துறையினர் ஏற்பாடுகளை செய்துள்ளனர். முல்லைப் பெரியாறு அணை நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்த சுப்ரீம் கோர்ட், 2014 மே 7ல் தீர்ப்பு வழங்கியது. இதைத் தொடர்ந்து அதே ஆண்டு ஜூலை 17ல் அணையை ஆய்வு செய்த எல்.ஏ.வி.நாதன் தலைமையிலான மூவர் குழுவினர், அணையில் 142 அடி தண்ணீர் தேக்கும் வகையில், அணையை ஒட்டியுள்ள 13 ஷட்டர்களையும் இறக்கி நடவடிக்கை எடுத்தனர்.

அதன்பின், சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின்படி 2014 நவ., 20ம் தேதி இரவு 12 மணிக்கு நீர்மட்டம் 142 அடியை எட்டியது. கடந்த சில தினங்களாக பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில் தொடர்ந்து மழை பெய்தது. இதன் காரணமாக கடந்த மாதம் 22ம் தேதி நீர்மட்டம் 136 அடியை எட்டியது. மேலும் மழை பெய்து அணையின் நீர்மட்டம் இந்த ஆண்டும் 142 அடியை எட்டிவிடாதா என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள் இருந்தனர். **இன்று 142 அடி:** நேற்று காலை

நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 141.10 அடியாகவும், பகல் 12 மணிக்கு 141.35 அடியாகவும், மாலையில் 141.60 அடியாகவும் இருந்தது. இதனால், இன்று காலைக்குள் அணையின் நீர்மட்டம் 142 அடியை எட்டும். அணைக்கு 1769 கன அடி நீர்வரத்து உள்ளது. தமிழகப்பகுதிக்கு 511 கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது. நீர் இருப்பு 7423 மில்லியன் கன அடியாகும்.

பெரியாறில் 9.4 மி.மீ., தேக்கடியில் 3.4 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வழங்கியபின், அணையில் 142 அடி நீர் தேங்குவது இது இரண்டாவது முறை. இந்த ஆண்டும் அணை யின் நீர்மட்டம் 142 அடியை எட்டுவதால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

**அதிகாரிகள் முகாம்:** அணையில் நீர் மட்டம் 142 அடியை எட்டும் நிலையில் தலைமைப் பொறியாளர் வள்ளியப்பன், செயற்பொறியாளர் மாதவன், உதவி செயற்பொறியாளர் சவுந்திரம் மற்றும் உதவிபொறியாளர்கள், தொழில் நுட்ப உதவியாளர்கள், ஊழியர்கள் என 50க்கும் மேற்பட்டோர் அணைப்பகுதியில் முகாமிட்டுள்ளனர்.

**வெள்ள அபாய எச்சரிக்கை:** அணையில் நேற்று காலை நீர்மட்டம் 141.10 அடியானவுடன், இரண்டாம் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடுவதற்கு பரிந்துரை செய்து, இடுக்கி மாவட்ட கலெக்டருக்கு தமிழக பொதுப்பணித்துறையினர் தகவல் அனுப்பினர். அதே போல் இன்று 142 அடியானவுடன் இறுதி கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடுவதற்கும் பரிந்துரை செய்ய தயார் நிலையில் உள்ளனர். ஆனால், இடுக்கி மாவட்ட நிர்வாகம் இதுவரை இரண்டாம் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கையை வண்டிப்பெரியாறு, வல்லக்கடவு கரையோரப்பகுதி மக்களுக்கு விடவில்லை.

**கூடுதல் நீர் திறக்க ஏற்பாடு:** நீர்மட்டம் 142 அடியைக் கடந்து விட்டால், அணையை ஒட்டியுள்ள 13 ஷட்டர் வழியாக கேரள பகுதிக்கு திறக்க வேண்டும். இவ்வாறு வெளியேறும் நீர் கேரள பகுதியில் சென்று இடுக்கி அணையில் சேரும். இதைத் தவிர்க்க, நீர்மட்டம் 142 அடியைக் கடப்பதற்கு முன், தமிழகப்பகுதிக்கு தேக்கடியில் உள்ள ஷட்டர் வழியாக கூடுதல் நீரை திறக்க தமிழக பொதுப்பணித்துறையினர் ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

இன்று தமிழகப்பகுதிக்கு கூடுதல் நீர் திறக்கும் பட்சத்தில், லோயர்கேம்பில் இருந்து பெரியாற்றில் கூடுதலான நீர் வரும் என்பதால் கூடலுார், குள்ளப்பகவுண்டன்பட்டி, கருநாக்கமுத்தன்பட்டி, சுருளிப்பட்டி கரையோரப் பகுதிகளில் உள்ளவர்கள் பாதுகாப்பான இடத்திற்கு செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**தஞ்சையில் விடிய, விடிய கனமழை**

தஞ்சாவூர் : தஞ்சாவூர் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் கனமழை பெய்து வருகிறது. தஞ்சை, பட்டுக்கோட்டை, கும்பகோணம் ஆகிய பகுதிகளில் விடிய விடிய கனமழை பெய்து வருவதால் மக்கள் வீட்டிற்குள்ளேயே தஞ்சம் அடைந்துள்ளனர்.

**மதுராந்தகம் ஏரி நீர்திறப்பு அதிகரிப்பு**

காஞ்சிபுரம் : மதுராந்தகம் ஏரியிலிருந்து திறக்கப்டும் நீரின் அளவு 20,700 கனஅடியிலிருந்து, 24,500 கனஅடியாக அதிகரித்துள்ளது. கிளியாற்றில் நீர் வெளியேற்றப்படுவதால், கரையோரமாக உள்ள 9 கிராமங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**தாமிரபரணி ஆற்றில் வெள்ளம்**

திருநெல்வேலி: திருநெல்வேலி, மேல நத்தம் தாமிரபரணி ஆற்றுப்பாலத்திற்கு மேல் ஒரு அடி உயரத்திற்கு தண்ணீர் செல்வதால் அந்த வழியை யாரும் பயன்படுத்த வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் நெல்லை குறுக்குத்துறை பாலம் மூழ்கியது, டவுன்- குறுக்குத்துறை போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

**வீராணத்தில் தண்ணீர் திறப்பு: 20 கிராமங்களுக்கு அபாயம்**

காட்டுமன்னார்கோவில்:வீராணம் ஏரியில் இருந்து தண்ணீர் வெளியேற்றப்படுவதால், 20 கிராமங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.கடலுார் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் அடுத்த வீராணம் ஏரிக்கு, தொடர் மழை காரணமாக, 4,000 கன அடி தண்ணீர் வருகிறது. அதுபோல, அரியலுார் மாவட்டத்தில் உள்ள பொன்னேரி முழு கொள்ளவை எட்டியதால், அங்கிருந்து வெளியேற்றப்படும், 1,000 கன அடி தண்ணீர், வடவாறு வழியாக வீராணம் ஏரிக்கு வந்து கொண்டிருக்கிறது. ஏரியின் பாதுகாப்பு கருதி, வெள்ளியங்கால் ஓடை வழியாக, 3,000 கன அடி, வி.என்.எஸ்.எஸ்., மதகு வழியாக வெள்ளாற்றுக்கு, 2,000 கன அடி தண்ணீர் நேற்று முதல் வெளியேற்றப்படுகிறது. மேலும், மணவாய்க்கால் மூலம் வெள்ளியங்கால் ஓடைக்கு, வினாடிக்கு, 4,000 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. தண்ணீர் கரை புரண்டு ஓடுவதால், வெள்ளியங்கால் ஓடை ஓரமாக உள்ள வீரநத்தம், திருநாரையூர், சிறகிழந்தநல்லுார், பருத்திக்குடி, குமராட்சி, கீழக்கரை, நந்திமங்கலம் உள்ளிட்ட, 20க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு, மாவட்ட நிர்வாகத்தால், வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மக்களை, பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்து செல்லும் பணியில் போலீசார் ஈடுபட்டுள்ளனர்.

**அமராவதி அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு எச்சரிக்கை! கரையோர பகுதிகளுக்கு வெள்ள அபாயம்**



திருப்பூர் மாவட்டம் முழுவதும் பரவலாக கனமழை பெய்து வருகிறது. உடுமலை அமராவதி அணைக்கு நீர்வரத்து, வினாடிக்கு, 12 ஆயிரம் கன அடியாக அதிகரித்ததால், உடனடியாக, ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டது. கரையோர கிராம மக்களுக்கு, வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வட கிழக்கு பருவமழை, தமிழகத்தில் தீவிரமடைந்துள்ளது. திருப்பூர் மாவட்டத்தில், மேற்குத்தொடர்ச்சி மலை மற்றும் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில், தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இருந்தாலும், திருப்பூர் மாநகரப் பகுதிகளில், இரு வாரங்களாக, வானம் மேக மூட்டத்துடன் இருந்தது; குறிப்பிடத்தக்க வகையில், மழை பெய்யவில்லை. நேற்று முன்தினம் இரவு, ஒரு மணி நேரம் பெய்த மழையால், ரோடுகளில் ஆங்காங்கே மழைநீர் தேங்கியது. நேற்று காலை மழை பெய்யவில்லை. மதியம் வரை, வானம் மேகமூட்டமாக இருந்தது. பிற்பகலுக்கு பின், சாரல் மழை பெய்தது; மாலை, 4:00 மணியில் இருந்து, அவ்வப்போது விட்டுவிட்டு மழை பெய்தது. மங்கலம், அவிநாசி, பல்லடம், மடத்துக்குளம், தாராபுரம் பகுதிகளில் கனமழை பெய்தது.

மழை காரணமாக, விடுமுறை நாளான நேற்று, பொதுமக்கள் வீடுகளிலேயே முடங்கினர். நகரின் பிரதான சாலைகளில் போக்குவரத்து குறைவாகவே காணப் பட்டது. சுபமுகூர்த்த தினம் என்பதால், பூ மார்க்கெட், தினசரி மார்க்கெட்டுகளில் கூட்டம் இருக்கும் என, எதிர்பார்க்கப்பட்டது. மழையால், அங்கும் வர்த்தகம் மந்தகதியில் இருந்தது.

**அமராவதியில் தண்ணீர் திறப்பு**

உடுமலை அமராவதி அணைக்கு காட்டாறுகளில் இருந்து நீர்வரத்து அதிகரித்துள்ளது. நேற்று அதிகாலை, 5:30 மணிக்கு, வினாடிக்கு, 12 ஆயிரம் கன அடி நீர்வரத்து இருந்தது. வரும் தண்ணீர், ஏழு மதகுகள் வழியாக, திறந்து விடப்பட்டது. நேற்று காலை நிலவரப்படி, அணை நீர்மட்டம், 88.40 அடியாக இருந்தது. அணை பகுதியில், 43 மி.மீ., மழை பதிவானது.

பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறியதாவது: தொடர் மழையால், அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. சில நாட்களாக, வினாடிக்கு, 2,000

கன அடியாக இருந்த நீர்வரத்து, திடீரென, 12,267 கனஅடியாக உயர்ந்தது. அணையின் கொள்ளளவான, 90 அடியில், 88 அடி மட்டும் இருப்பு வைக்கப்பட்டு, உபரி நீர், உடனடியாக வெளியேற்றப்படுகிறது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, கரையோர மக்களுக்கு, வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டு, பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டது. பாதுகாப்பை உறுதிப்படுத்திய பிறகே, அணையில் இருந்து உபரி நீர், ஆற்றில் திறந்து விடப்பட்டது. அதிகாலையில், 12,267 கனஅடியாக இருந்த நீர்வரத்து, பிற்பகல், 3:30 மணியளவில், வினாடிக்கு, 6,271 கன அடியாக குறைந்தது. அதிகப்படியான நீர் வெளியேற்றப்படுவதால், கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு, அவர்கள் கூறினர். நேற்று முன்தினம் முதல், நேற்று காலை வரை, அவிநாசியில், 6.5 மி.மீ.,; திருப்பூர், 8.5; உடுமலை, 9; பல்லடம், 21; தாராபுரம், 15; காங்கயம், 28; மூலனூர், 20 மி.மீ., மழை பதிவானது. மாவட்டம் முழுவதும் மழை பெய்து வருவதால், மாவட்ட பேரிடர் மேலாண்மை குழு, 24 மணி நேரமும் தீவிர கண்காணிப்பை மேற்கொண்டு வருகிறது. வருவாய்த்துறையினர், போலீசார், தீயணைப்பு மற்றும் மீட்பு பணி வீரர்கள், தயார் நிலையில் இருக்கும்படி, மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

# ரூ.1 லட்சம் கோடி!

- 100 ஆண்டு இல்லாத மழையால் சென்னை, புறநகரில் இழப்பு
- எப்போது வீடு திரும்புவோம் என ஏக்கத்தில் காத்திருக்கும் மக்கள்
- மீண்டும் மழை பெய்வதால் நிவாரண பணிகளில் பின்னடைவு

தமிழகத்தில், 100 ஆண்டுகளுக்கு இல்லாத அளவு மழை கொட்டித் தீர்த்ததால், சென்னை மற்றும் புறநகரில், ஒரு லட்சம் கோடி ரூபாய் மதிப்புக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. வெள்ளத்தில் சிக்கித் தவித்து, நிவாரண முகாம்களில்

தங்கியுள்ள மக்கள், எப்போது வீடு திரும்புவோம் என, ஏக்கத்தில் காத்திருக்கின்றனர். மீண்டும் மழை பெய்வதால், நிவாரணப் பணிகளில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. * சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர் மாவட்டங்களில், 14 லட்சம் மக்கள், முகாம்களில் தங்கி உள்ளனர். * சென்னை மாநகராட்சியின் கணக்கு படி, வீடுகள் என்ற கணக்கில், 11 லட்சம் கட்டடங்களுக்கு வரி வசூலிக்கப்படுகிறது. ஒரு கட்டடத்தில், ஒரு குடும்பம் மட்டும் இல்லை. ஒன்று முதல், ஐந்து குடும்பங்கள்வரை வசித்து வருகின்றன. இந்த கணக்கு படி, 30 லட்சம் குடும்பங்கள் வசிக்கும் வீடுகளில், வெள்ள நீர் புகுந்து அனைத்து உடைமைகளும் பாழாகி விட்டன. * ஒரு குடும்பத்திற்கு, குறைந்தபட்சம், மூன்று லட்சம் ரூபாய் அளவுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. இதன்படி, 30 லட்சம் குடும்பங்களுக்கு, ஒட்டு மொத்தமாக, ஒரு லட்சம் கோடி ரூபாய் வரை இழப்பு ஏற்பட்டுள்ளது. இது தவிர வணிக நிறுவனங்கள், கிடங்குகள், ஓட்டல்கள், கடைகள், சிறு,நடுத்தர, குறுந்தொழில்கள், ஒரு மாதத்திற்கு மேலாக முடங்கிக் கிடக்கின்றன.

மக்களின் உழைக்கும் திறனும் முடங்கியுள்ளது. இப்படி, ஒட்டுமொத்த பாதிப்புகளையும் கருத்தில் கொண்டால், தொடர் மழையால் ஏற்பட்ட பாதிப்பு, ஒரு லட்சம் கோடி ரூபாயை தாண்டும் என்கின்றனர், நிதித் துறை ஆலோசகர்கள். இந்நிலையில், 'வங்கக் கடலில், மேலும், ஒரு காற்றழுத்த தாழ்வு நிலை ஏற்பட்டுள்ளது; இரண்டு நாட்களுக்கு கன மழை நீடிக்கும்' என, வானிலை ஆய்வு மையம் தெளிவுபடுத்தி உள்ளது. 'கன மழை பெய்தால், மீட்புப் பணி பெரும் சவாலாக அமையும்' என, பேரிடர் மீட்புக் குழுவினரும் வெளிப்படையாகக் கூறுகின்றனர்.

**தொடர் மழைக்கும் நிரம்பாத கொசப்பாடி ஏரி**

சங்கராபுரம்: கொசப்பாடி ஏரிக்கான வரத்து கால்வாய்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதால், நீர் வரத்தின்றி வறண்டு கிடக்கிறது.

சங்கராபுரம் அடுத்த கொசப்பாடி ஏரிக்கு, கல்வராயன்மலையில் உற்பத்தியாகும் மணி நதியிலிருந்து, பாப்பக்கால் ஓடை வழியாக மழை நீர் வந்து சேரும். இதனால் மழைக் காலங்களில் ஏரி முழுமையாக நிரம்பி, உபரி நீர் வெளியேறி பொய்குனம், நெடுமானூர் ஏரிகளுக்கு சென்றடையும். இதனால் 3 கிராம விவசாயிகள், 3 போக, பயிர் சாகுபடி செய்து வந்தனர்.

கடந்த 15 ஆண்டுகளுக்கு முன், கல்வராயன்மலையை சேர்ந்த தும்பை, பாச்சேரி, மோட்டாம்பட்டி கிராமத்தின் வழியாக வந்த இந்த வாய்க்காலை சிலர் ஆக்கிரமித்தால், வரத்துக் கால்வாய்கள் அடைபட்டு போனது. இதனால் கொசப்பாடி ஏரிக்கு தண்ணீர் வரத்து இல்லாததால், கடந்த 15 ஆண்டுகளாக இப்பகுதியில் விவசாய பணிகள் பாதிக்கப்பட்டன.

ஏரிக்கு தண்ணீர் வரும் பாப்பக்கால் ஓடை மூடப்பட்டதால், ஆற்று வாய்க்கால் மூலம் ஏரிக்கு தண்ணீர் கொண்டு வர, கடந்த 15 ஆண்டுகளாக தமிழக அரசு மற்றும் மாவட்ட நிர்வாகத்துக்கும் தொடர்ந்து பல முறை கோரிக்கை மனுவை இப்பகுதி மக்கள் அனுப்பினர். அதனை தொடர்ந்து கடந்த தி.மு.க., ஆட்சியின் போது, புதுபாலப்பட்டு ஆற்றில் தடுப்பணை அமைத்து, அதிலிருந்து கொசப்பாடி ஏரிக்கு ஆற்று வாய்க்கால் அமைக்க தடுப்பணை கட்டப்பட்டது. ஆற்று வாய்க்கால் அமைப்பதற்குள் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதால், தற்போது இத்திட்டம் கிடப்பில் போடப்பட்டுள்ளது. கொசப்பாடி கிராம மக்கள், கடந்த 4 ஆண்டுகளாக பலமுறை ஆற்று வாய்க்கால் அமைத்து தர அரசுக்கு கோரிக்கை அனுப்பியும் இதுவரை நடவடிக்கை இல்லை. எனவே பாலப்பட்டு ஆற்று தடுப்பணையிலிருந்து, ஆற்று வாய்க்கால் அமைத்திட மாவட்ட நிர்வாகம் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**பொள்ளாச்சி ஆழியாறு அணை நிரம்பியது**

பொள்ளாச்சி:கோவை மாவட்டம், பொள்ளாச்சி அருகே உள்ள, ஆழியாறு அணை நிரம்பிஉள்ளது. தமிழகத்தின் பொள்ளாச்சி மற்றும் கேரளா பகுதிகளான, அப்பர் ஆழியாறு, காடம் பாறை, அக்காமலை, அட்டக்கட்டியில்தொடர்ந்து மழை பெய்து வந்ததால், ஆழியாறு அணைக்கு

நீர்வரத்து அதிகரித்தது. நேற்று முன்தினம் காலை, 5:10 மணிக்கு, அணை முழு கொள்ளளவை எட்டியதால், நேற்று காலை, 5:10 மணிக்கு, வினாடிக்கு, 600 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறுகையில், 'ஆழியாறு அணையின் மொத்த கொள்ளளவான, 120 அடியில், 119.50 அடியை எட்டி விட்டது. அணையின் பாதுகாப்புக்காக, உபரிநீர் வெளியேற்றப்படுகிறது. ஆற்றோரம் வசிப்போர் மற்றும் மலைவாழ் மக்கள், பாதுகாப்பாக இருக்க எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது' என்றனர்.

**பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு நிறுவனங்கள் தாராள உதவி**



புதுடில்லி:சென்னையில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, மத்திய அரசின் கோரிக்கையை ஏற்று, பல நிறுவனங்கள் உணவுப் பொருட்களை வழங்கி வருகின்றன. இது குறித்து, மத்திய உணவு மற்றும் பதப்படுத்துதல் துறை அமைச்சர், ஹர்சிம்ரத் கவுர் பாதல் வெளியிட்டுள்ள அறிக்கை:சென்னை மக்களுக்கு, பால், பதப்படுத்தப்பட்ட உணவு, பாட்டில் குடிநீர் போன்றவற்றை தடையின்றி கிடைக்கச் செய்யும்படி, உணவு நிறுவனங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளன. அதை ஏற்று, 'நெஸ்லே இந்தியா' நிறுவனம், 10 டன் 'மேகி' நூடுல்ஸ், 5,000 லிட்டர் பாக்கெட் பால், 50 ஆயிரம் காபி பாக்கெட்டுகளை அனுப்பியுள்ளது.அத்துடன், 25 முதல், 30 டன் நூடுல்ஸ், 8 டன், 'மஞ்ச்' பிஸ்கட், 800 கிலோ, 'சன்ரைஸ்' பிஸ்கட்டுகளும் அனுப்பி

வைக்கப்பட்டுள்ளன.

ஐ.டி.சி., நிறுவனம், ஆறு வாகனங்களில், 3,163 பிஸ்கட் பெட்டிகளையும், எம்.டி.ஆர்., நிறுவனம், 49 ஆயிரம் உடனடி உணவு பாக்கெட்டுகளையும் அனுப்பியுள்ளன. இவையெல்லாம், சென்னை, நேரு விளையாட்டரங்கில் உள்ள, தமிழக அரசின் நிவாரண உதவி மையத்தில் இன்று ஒப்படைக்கப்படும். 'பிரிட்டானியா' நிறுவனம், மூன்று வாகனங்களில், 345 பிஸ்கட் பெட்டிகளை அனுப்பியுள்ளது; மேலும், இரு வாகனங்களில், பிஸ்கட்டுகளை அனுப்ப உள்ளது. அத்துடன், ரொட்டி மற்றும் கூடுதலாக பால் பாக்கெட்டுகள் வழங்கும்படியும், அந்நிறுவனத்திடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. 'கோக கோலா' மற்றும் 'பெப்சிகோ' நிறுவனங்கள், 50 ஆயிரம் மற்றும், 12 ஆயிரம் குடிநீர் பாட்டில்களை வழங்கியுள்ளன. 'பார்லே' நிறுவனமும், மூன்று வாகனங்களில், பிஸ்கட்டுகளை அனுப்ப ஏற்பாடு செய்துள்ளது. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## விவசாயிகளுக்கு அதிகாரிகள் வேண்டுகோள் இரு மடங்கு உற்பத்தியை பெருக்க ஆலோசனை

பொள்ளாச்சி : சத்துக்கள் குறையாமல் மண்ணை பாதுகாத்தால், விளைச்சலில் இரு மடங்கு உற்பத்தியை பெருக்கலாம்; மும்மடங்கு வருமானத்தை பார்க்கலாம் என, வேளாண் இணை இயக்குனர் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

நேற்று உலக மண் தினம். இயற்கை மண்ணில் பாஸ்பரஸ், சுண்ணாம்பு, இரும்பு, ெமக்னீசியம், துத்தநாகம், மாங்கனீஸ், பொட்டாசியம் போன்ற கனிம சத்துக்கள் உள்ளன. இச்சத்துகளை இழந்த மண்ணின் தன்மையை ஆராய்ந்தால், நச்சுக்களால் விவசாயம் முடங்கி வருவது வெட்ட வெளிச்சமாகி உள்ளது. கனமழை பெய்யும் போது, சத்து மிக்க மேல் மண் அடித்து செல்லப்பட்டு விடுகிறது. இருக்கும் மண்ணின் வளத்தை அதிகரித்து, பாதுகாக்க வேண்டும் என்பதையே மண்வள தினம் உணர்த்துகிறது. தற்போது, மண்ணின் சத்துக்கள் குறைந்து வருவதால், மழை நீர் நேரடியாக நிலத்தின்

அடியில் செல்லாமல் வழிந்தோடுகிறது. இதனால், அனைத்து சத்துக்களும் குறைந்து, மண் மலட்டுத்தன்மையை பெற்று வருகிறது. ஆகவே, இதுகுறித்து விவசாயிகள் விழிப்புணர்வு கொள்ள வேண்டும். இதை வலியுறுத்தவே, ஆனைமலை, பொள்ளாச்சி வடக்கு, தெற்கு மற்றும் கிணத்துக்கடவு ஒன்றிய விவசாயிகள் பங்கு கொண்ட மண் பரிசோதனை அடிப்படையில், ஊட்டச்சத்து நிர்வாகம் குறித்த விழிப்புணர்வு முகாம் நடந்தது.

பொள்ளாச்சி வடக்கு, வேளாண் விரிவாக்க மையத்தில் நடந்த நிகழ்ச்சியில், சிறப்பு அழைப்பாளர்களாக சப் - கலெக்டர் காயத்ரி கிருஷ்ணன், அட்மா திட்ட தலைவர் சக்திவேல் பங்கேற்றனர். மாவட்ட வேளாண் இணை இயக்குனர் சந்திரசேகரன் பேசியதாவது: மாவட்டத்தில், 98 கிராமங்களில் மண் பரிசோதனை முடிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் மண் பரிசோதனை அடையாள அட்டை வழங்கும் இயக்கம் துவங்கியுள்ளது. அடுத்த ஆண்டில் இத்திட்டம் நிறைவு பெறும். மண்ணில் உள்ள நுண்ணூட்டச்சத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டும். மண்ணில், 16 வகையான நுண்ணுயிரிகள் வாழ்கின்றன. இவற்றை பாதுகாப்பதே மண் தினம் கொண்டாடுவதன் நோக்கம். தவிர, சாகுபடி செய்யப்படும் பயிர்கள் மூலம் இரு மடங்கு உற்பத்தியை பெருக்க வேண்டும்; இதன் மூலம் மூன்று மடங்கு வருவாயை கூட்ட வேண்டும் என்பதே திட்டத்தின் இலக்காகும். இதற்கு உற்பத்தி செலவை குறைக்க வேண்டும். அதாவது மண் வளத்தை காக்க, உரச் செலவை கட்டுக்குள் கொண்டு வரவேண்டும். இவ்வாறு சந்திரசேகரன் பேசினர்.

**கருத்துக்கள் பரிமாற்றம்**

முன்னதாக, நிகழ்ச்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு 'மண் வள இயக்கம்' சார்பில் மண் பரிசோதனை அட்டைகள் வழங்கப்பட்டன. தொடர்ந்து, மண் மாதிரிகள் சேகரிப்பு தொழில் நுட்பம், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம், மண்மாதிரி சேகரித்தல் செயல்விளக்கம், மண்ணில் காணப்படும் பிரச்னை, அதற்கான தீர்வுகள் குறித்து பேசப்பட்டு, விவசாயிகளின் நேரடி கருத்துக்கள் பரிமாறப்பட்டன. நிகழ்ச்சியில் வேளாண் உதவி இயக்குனர்கள்,

தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர்கள் மற்றும் கள அலுவலர்கள் பங்கேற்றனர்.

**மாவட்டத்தில் காய்கறி விலை குறைந்தது சென்னையில் மழை தொடர்வதால்**

பொள்ளாச்சி: சென்னையில் தொடரும் பலத்த மழை காரணமாக, கோவை மாவட்டத்தில் விளையும் காய்கறிகளின் விலை, கணிசமாக குறைந்துள்ளது.

கோவை மாவட்டத்தில் தென்னைகளுக்கு அடுத்தபடியாக, காய்கறிகள் அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. குறிப்பாக, பொதுமக்களின் வரவேற்புக்கு ஏற்ற நேரங்களில், விலை கிடைப்பதால் தக்காளி சாகுபடி மாவட்டம் முழுவதும் பல ஆயிரம் ஏக்கரில் நடக்கிறது.

குறிப்பாக, கிணத்துக்கடவு, தொண்டாமுத்துார், பொள்ளாச்சி பகுதிகளில் சாகுபடி பரப்பளவு அதிகரித்து வருகிறது. இதேபோல, மானாவாரி நிலங்களில் தட்டைப்பயிறும், பொரியல் தட்டையும் அதிகளவில் சாகுபடியாகிறது.

சொட்டு நீர் பாசனத்தில் பந்தல் காய்கறிகள் உற்பத்தி அதிகரித்து வருகிறது. இதற்காக பந்தல் காய்கறி உற்பத்தியாளர் சங்கமே நடக்கிறது. கடந்த ஒரு மாதமாக வடகிழக்கு பருவமழையின் தாக்கம் தமிழகம் முழுவதும் நீடித்து வருகிறது.குறிப்பாக, சென்னை, கடலுார், செங்கல்பட்டு மாவட்டங்களில் மழையின் கோரதாண்டவம் மக்களின் வாழ்வாதாரத்தை பதைபதைக்க வைத்துள்ளது. இம்மழை இனியும் தொடரும் என்பதால் பொதுமக்கள் அச்சம் அடைந்துள்ளனர்.

இந்நிலையில், கோவை மாவட்டத்தில் விளையும் காய்கறிகள் கோவை, பொள்ளாச்சி, மேட்டுப்பாளையம், சுந்தராபுரம், நாச்சிபாளையம், கிணத்துக்கடவு மார்க்கெட்களில் விற்பனை செய்யப்படுகிறது.

இங்கு கொள்முதல் செய்யப்படும் காய்கறிகள் கோவை மட்டுமல்லாது மதுரை, சென்னை மற்றும் கேரளாவுக்கும் அனுப்பப்படுகிறது.தற்போது சென்னையில் அடைமழையுடன், வாகன போக்குவரத்தும் நிறுத்தப்பட்டுள்ளதால் காய்கறிகள் அனுப்பப்படுவதில்லை. இதனால் உள்ளூர் வியாபாரிகளே எடுத்து விற்கும்

நிலை ஏற்பட்டுள்ளது. போட்டிகள் குறைந்து போனதால், காய்கறிகளின் விலை வெகுவாக குறைந்துவிட்டது. ஆனாலும், பொள்ளாச்சியில் இருந்து காய்கறிகள் சென்னைக்கு அனுப்பப்படுவதில்லை. மாறாக, இங்கிருந்து கேரளாவுக்கு தான் அனுப்பப்படுகிறது.இருந்தும், மார்க்கெட்டில் கடந்த வாரத்தை காட்டிலும் தக்காளி, 50 ரூபாய் வரை விலை குறைந்துள்ளது. நேற்றைய நிலவரப்படி, 14 கிலோ எடையுள்ள ஒரு கூடை தக்காளி, தற்போது அதிகப்பட்சமாக, 350 ரூபாய்க்கு விற்றது. கடந்த வாரம் இது 400 ரூபாய்க்கு விற்றது. இதேபோல, வெண்டைக்காய், 40 ரூபாயில் இருந்து 27 ரூபாய்க்கும் புடலை, 30 ரூபாயில் இருந்து 25 ரூபாய்க்கும், பாகல், 35 ரூபாயில் இருந்து 30 ரூபாய்க்கும் நேற்று விற்பனையானது. அடுத்து வரும் நாட்களில் இதே விலை நீட்டிக்கும் அல்லது தொடர்ந்து இறங்குமுகத்தில் இருக்கும் என, வியாபாரிகள் தெரிவித்தனர்.

**பாலாறு, ஆழியாறு பகுதிகளில் வெள்ளப்பெருக்கு! பாதுகாப்பாக இருக்க அறிவுரை**



பொள்ளாச்சி : பொள்ளாச்சி மற்றும் சுற்றுப்பகுதிகளில், பருவமழை பெய்ததையடுத்து, பாலாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால், கிராமங்களுக்கு செல்லும் தரைப்பாலங்கள் நீரில் மூழ்கின. ஆனைமலை பகுதியில், ஆழியாறு, உப்பாறு, வாகையாறு, பாலாறு உள்ளிட்டவை உள்ளன. இதில் பலாற்றில், வடகிழக்கு பருவமழை காலங்களில் தண்ணீர் வரத்து இருக்கும்; மற்ற காலங்களில் வறண்டு விடும். தற்போது, மேற்குத்தொடர்ச்சி

மலை பகுதியில் வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது. இதனால், பாலாற்றில் கடந்த சில நாட்களாக தண்ணீர் வரத்து உள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன், ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. மழை குறைந்ததால், நீர் வரத்தும் குறைந்தது. இந்நிலையில், நேற்றுமுன்தினம் முதல், பாலாற்றின் நீர் பிடிப்பு பகுதிகள் மற்றும் ஆழியாறு, நா.மூ.சுங்கம், அர்த்தநாரிபாளையம் உள்ளிட்ட பகுதிகளில், பரவலாக மழை பெய்தது. இதனால், அந்த பகுதியில் உள்ள சிற்றோடை மற்றும் நீர் நிலைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்தது, பாலாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. திடீரென ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால், அர்த்தநாரிபாளையம், கம்பாளபட்டி, சோமந்துறை சித்துார், ஜமீன் கோட்டாம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள தரைப்பாலங்கள் தண்ணீரில் முழ்கின. அவ்வழியாக வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

`இதன் காரணமாக, 30க்கும் மேற்பட்ட கிராமங்களை சேர்ந்த மக்கள், பொள்ளாச்சி மற்றும் சுற்றுப்பகுதி களுக்கு சுற்றிச்செல்லும் நிலையே காணப்பட்டது. ஆவலுடன் பார்த்த மக்கள் ஜமீன் கோட்டாம்பட்டி தரைப்பாலத்தின் மேல் தண்ணீர் செல்வதை ஆர்வமுடன் பார்க்க மக்கள் குவிந்தனர். தரைப்பாலத்தில் நீர் பெருக்கெடுத்து ஓடியதால், வாகனங்கள் செல்ல முடியவில்லை. வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதை காண பொதுமக்கள் அங்கு குவிந்தனர். ஒரு சிலர் ஆர்வத்தில், தரைபாலத்தையொட்டி நின்று கொண்டு மொபைலில் போட்டோவும், ஒரு சிலர் செல்பியும் எடுத்துக்கொண்டனர்.

**கோவிலில் வெள்ளம் சூழ்ந்தது**

பொள்ளாச்சி -வால்பாறை ரோட்டில், சண்முகபுரம் அருகே பாலாற்றங்கரையில், ஆஞ்சநேயர் கோவில் அமைந்துள்ளது. பாலாற்று நடுவே அமைந்துள்ள கோவிலில், மழைக்காலத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு வெள்ளம் கோவிலை சூழ்ந்து விடும். இதுபோல, நேற்றுமுன்தினம் இரவு முழுவதும் மழை அதிகமாக பெய்ததால், கோவில் முழுவதும் வெள்ளம் சூழ்ந்தது. கோவில் முன்பு, பக்தர்கள் செல்லும் நடைபாதை பகுதியிலும்

வெள்ளம் சூழ்ந்துள்ளது கோவிலை சுற்றிலும் வெள்ளம் சூழ்ந்ததால், பாதுகாப்பினை கருத்தில் கொண்டு பக்தர்கள் அனுமதிக்கப்படவில்லை. கோவிலில் பூஜைகள் செய்ய யாரும் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

**தொடரும் தடை**

பொள்ளாச்சி -வால்பாறை ரோட்டில் அமைந்துள்ளது குரங்கு அருவி. இந்த அருவிக்கு மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதியிலிருந்து பெய்யும் மழை காரணமாக அருவிக்கு நீர் வரத்து உள்ளது. இயற்கையாக கொட்டும் அருவியில் குளித்து மகிழ பல்வேறு பகுதியிலிருந்தும் சுற்றுலாப்பயணிகள் வந்து செல்வது வழக்கம். நேற்றுமுன்தினம் முதல் தொடர் மழை காரணமாக, அருவியில் நீர் பெருக்கு ஏற்பட்டது. சுற்றுலாப் பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

**மழை எங்கே... எவ்வளவு...**

ஆழியாறு- 20.4, அமராவதி-43, திருமூர்த்தி-23, அப்பர் நீராறு-8, லோயர் நீராறு-10, வால்பாறை-3, வேட்டைக்காரன்புதுார்-4.6, பொள்ளாச்சி-9, மணக்கடவு-3.2, அப்பர் ஆழியாறு-49.6, சுல்தான்பேட்டை-20, பொங்கலுார்-27, காங்கேயம்-28, நெகமம்-7, பல்லடம்-21, உப்பாறு-12, நல்லுார்-74, நவமலை-35, சர்க்கார்பதி-20, வெள்ளக்கோவில்-25.6, உடுமலை-9, பூலாங்கிணறு-11, கோமங்கலம்-8, பெதப்பம்பட்டி-12.6, வரதராஜபுரம்-18 என மழையளவு பதிவாகியது.

**வேலூர் மாவட்டத்தில் தொடர் மழை: 1,000 ஏக்கர் பருத்தி நாசம்**

வேலூர்: தொடர் மழைக்கு, பூச்சி தாக்குதலுக்கு, 1,000 ஏக்கருக்கு மேற்பட்ட பருத்தி பயிர் நாசமானது. வேலூர் மாவட்டம், குடியாத்தம் அடுத்த சின்னலபல்லி, தட்டப்பாறை, சேங்குன்றம், முக்குன்றம், நாராயணபுரம், சூரியனூர், வெள்ளேரி ஆகிய கிராமங்களில் உள்ள விவசாயிகள், 600 பேர், 2,000 ஏக்கரில் பருத்தி பயிரிட்டனர். தற்போது பெய்து வரும் தொடர்

மழையினால், பயிரிடப்பட்ட, 1,000 ஏக்கருக்கு மேற்பட்ட பருத்தி செடியில், பூச்சி தாக்குதலுக்கு உள்ளாகி நாசமடைந்துள்ளது. இது குறித்து நாராயணபுரம் பருத்தி சாகுபதி விவசாயிகள் சங்க தலைவர் வெங்கடாச்சலம் நேற்று குடியாத்தத்தில் கூறியதாவது: தற்போது பெய்து வரும் தொடர் மழையால், பருத்தி செடிகள் முழுவதும் அழிந்து விட்டது. மழை நின்றாலும் பருத்தி சாகுபதிக்கு வாய்ப்பில்லை. பார்ப்பதற்கு பருத்தி செடிகள் பசுமையாக உள்ளது. அதில் உள்ள பூக்கள், பிஞ்சுகள் உதிர்ந்து செடியில் உள்ள காய்கள் அழுகிப் போய் விட்டது. ஒரு பருத்தி செடிக்கு, 18 முதல் 22 களைப்பு இருக்க வேண்டும். ஒரு களைப்புக்கு, 5 முதல் 7 காய்கள் காய்த்து மொத்தம், 100 காய்கள் வரை இருக்க வேண்டும். ஆரம்பத்தில், 10 முதல் 15 காய்கள் வந்தது. தொடர்ந்து பெய்த மழையினால், இலைச்சுருள் நோய், தத்துப்பூச்சி, சாறு உறிஞ்சி பூச்சி, கருப்பு சீடை தாக்குதல் ஏற்பட்டு பருத்தி காய்கள் அனைத்தும் அழிந்து விட்டது. பருத்தி செடிக்கு தொடர்ச்சியாக மழை பெய்து தண்ணீர் தேங்கக் கூடாது என, வேளாண்மை அதிகாரிகள் கூறுகின்றனர். ஆனால், தொடர் மழைக்கு நிலத்தில் ஒரு அடிக்கு தண்ணீர். பத்து நாள் தேங்கியது. கஷ்டப்பட்டு மோட்டார் வைத்து தண்ணீரை அகற்றியும், பூச்சிகள் தாக்குதலினால், பருத்தி செடியும், அதில் உள்ள காய்களும் அழிந்து விட்டது. மேற்கொண்டு சாகுபதி செய்வதற்கு வாய்ப்பில்லை. குடியாத்தம் சுற்று வட்டாரப் பகுதியில், 400 விவசாயிகள் பயிர் செய்த, 1,000 ஏக்கருக்கு மேல் பருத்தி பயிர் நாசமாகியுள்ளது. இதனால் விவசாயிகளுக்கு, 50 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. வேளாண்மைத்துறை, வருவாய்த்துறை அதிகாரிகள் பாதிக்கப்பட்ட பருத்தி நிலங்களை பார்வையிட வரவில்லை. மாவட்ட கலெக்டர் நந்தகோபால், ஆய்வு செய்து, அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று, பாதிக்கப்பட்ட பருத்தி விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் பெற்றுத் தர வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**ஈரப்பதமான வெங்காயம் விலை வீழ்ச்சி: ரூ.18 க்கு கொள்முதல் செய்வதால் சோகம்**

கொளத்தூர்: பருவமழையால் பாதித்த, ஈரப்பதம் மிகுந்த சிறிய வெங்காயத்தை வியாபாரிகள் கிலோ, 18 ரூபாய்க்கு கொள்முதல் செய்வதால்,விவசாயிகள் சோகத்தில் உள்ளனர். சேலம் மாவட்டம், கொளத்தூர் ஒன்றியம், மூலக்காடு, சின்னமேட்டூர், சேத்துக்குழி, பண்ணவாடி உள்ளிட்ட மேட்டூர் அணை கரையோர பகுதிகள், லக்கம்பட்டி, தார்க்காடு, கோவிந்தபாடி சபகுதியிலும் பரவலாக விவசாயிகள் சின்ன வெங்காயம் சாகுபடி செய்தனர். அறுவடை பருவத்தில் பருவமழை தீவிரம் அடைந்ததால், மண்ணுக்குள் அழுகி வீணாவதை தடுக்க, விவசாயிகள் அவசர கதியில் வெங்காயத்தை அறுவடை செய்து வருகின்றனர். மழை நீடிப்பதால் அறுவடை செய்த சிறிய வெங்காயத்தை உலர வைக்க வழியின்றி, ஈரப்பதத்துடனே விற்பனை செய்ய வேண்டிய நிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது. ஈரப்பதத்துடன் கூடிய வெங்காயத்தை வியாபாரிகள் குறைந்த விலைக்கு கொள்முதல் செய்வதால், நஷ்டம் காரணமாக விவசாயிகள் விரக்தியில் உள்ளனர். மூலக்காடு விவசாயி சீரங்கன் கூறியதாவது: சந்தையில் ஒரு கிலோ உலர்ந்த சிறிய வெங்காயம், 50 ரூபாய், ஈரப்பதமான வெங்காயம் கிலோ, 25 முதல், 30 ரூபாய் வரையிலும் விற்பனையாகிறது. இதனால், வியாபாரிகள், எங்களிடம் ஒரு ஈரப்பததுடன் கூடிய வெங்காயத்தை கிலோ, 18 ரூபாய்க்கு கொள்முதல் செய்கின்றனர். வெங்காயத்தை உலர வைக்க முடியாததால் குறைந்த விலைக்கு வியாபாரிகளிடம் விற்பனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், ஏக்கருக்கு, 40 ஆயிரம் ரூபாய் வரை, நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**கருநோய் தாக்கத்தால் நிலக்கடலை பாதிப்பு**

பள்ளிபாளையம்: பள்ளிபாளையம் பகுதியில், நிலக்கடைலை சாகுபடியில் கருநோய் தாக்கியதால், விவசாயிகள் அறுவடை செய்ய முடியாமல் தவிக்கின்றனர். பள்ளிபாளையம் வட்டாரத்தில், வெப்படை, பாதரை, ஆனங்கூர், சவுதாபுரம், செட்டிகாடு உள்ளிட்ட பகுதிகளில் நிலக்கடைலை

சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நான்கு மாதம் சாகுபடி பயிரான நிலக்கடலை, தற்போது அறுவடை செய்யும் வகையில் வளர்ந்துள்ளது. ஆனால், தொடர்மழை காரணமாக, கருநோய் பாதிப்பால், நிலக்கடலை சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது. நிலக்கடலையின் கொடியும் மழையில் நனைவதால், கால்நடைக்கு தீவனத்திற்கு பயன்படுத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து, விவசாயி நந்தகோபால் கூறியதாவது: புரட்டாசி மாதம் நிலக்கடலையை, விவசாயிகள் சாகுபடி செய்ய துவங்கினர். நான்கு மாதத்தில் அறுவடை செய்யலாம் என்ற நிலையில், பருவ மழையால், தற்போது செடிகள் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, கருநோய் தாக்கியதால், கொடியும் தீவனத்திற்கு பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஒரு ஏக்கருக்கு, 15 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்தும், தற்போது போட்ட பணத்தை எடுக்க முடியாத நிலை உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## மீண்டும் தொடரும் மழையால் அறுவடை பணிகளில் தீவிரம் காட்டும் விவசாயிகள்

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், மீண்டும் மழை தொடர்வதால், பாதிப்பை தடுக்க, அறுவடைக்கு தயாராக உள்ள நெல், மரவள்ளி கிழங்கு உள்ளிட்ட பயிர்களை அறுவடை செய்யும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

தர்மபுரி மாவட்டத்தில், 15 ஆயிரம் ஹெக்டேருக்கு மேல் நெல், 10 ஆயிரம் ஹெக்டேருக்கு மேல் மரவள்ளி கிழங்கு, 8,000 ஆயிரம் ஹெக்டேருக்கு மேல் சாமை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பயிர்கள் அறுவடை தொடங்கிய நேரத்தில், மழையால், நெல், மரவள்ளி கிழங்கு, சாமை உள்ளிட்டவற்றின் அறுவடை பாதிக்கப்பட்டது. நிலத்தில் தேங்கிய மழை நீரால் மரவள்ளி கிழங்கு, காற்று மற்றும் மழை ஈரத்தால் வயலில் சாய்ந்த நெற்கதிர்கள் மற்றும் சாமை ஆகியவை முளைக்க தொடங்கியதால் விவசாயிகள் கவலை அடைந்தனர். இந்நிலையில், கடந்த சில நாட்களாக மழையின் தாக்கம் குறைந்ததால் விவசாயிகள், அறுவடை பணி தொடங்கினர். ஆனால், மீண்டும் பல்வேறு பகுதிகளில் நேற்று முன்தினம் முதல் சாரல் மழை பெய்து வருகிறது. மழை தொடர்வதால், நெல், மரவள்ளி கிழங்கு, சாமை உள்ளிட்ட பயிர்களை

அறுவடை செய்யும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். மரவள்ளி கிழங்கிற்கு போதிய விலை இல்லாத நிலையில், தற்போது விவசாயிகளுக்கு, மேலும், அறுவடை செலவு அதிகரித்துள்ளதால், மிக குறைந்த அளவிலாவது லாபம் கிடைக்குமா என, அச்சம் அடைந்தள்ளனர். சாமையை சாலையில் கொட்டி தானியத்தை பிரிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால், மாவட்ட நிர்வாகம், கிராம பகுதிகளில், சேமடைந்துள்ள, தானிய தளத்தை சீரமைத்து தர, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது: இந்தாண்டு, பருவமழை அதிகளவு பெய்ததால், அறுவடைக்கு தயாராக இருந்த, நெல், சாமை, மரவள்ளி கிழங்கு, பருத்தி உள்ளிட்டவை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. மூன்று நாட்களாக மழையில்லாததால், மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களை அறுவடை செய்யும் பணியில் ஈடுபட்டு வந்தோம். நேற்று மீண்டும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், சாரல் மழை பெய்ய தொடங்கியதால், மழையால், அறுவடைக்கு தயாராக உள்ள பயிர்கள் பாதிக்கப்படுவதை தடுக்க, கூடுதல் பணியாளர்கள் மூலம், அறுவடை வேகமாக நடந்து வருகிறது. அதனால், பயிர் சாகுபடியில் கிடைக்கும் வருவாயில் கூடுதல் செலவு ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## அறுவடை ஆரம்பம்: நெல் கொள்முதல் நிலையங்கள் திறப்பு எப்போது?

ஈரோடு: தொடர் மழை பெய்து வரும் நிலையில், ஈரோடு மாவட்டத்தில் காலிங்கராயன் பாசனப்பகுதியில் நெல் அறுவடை பணி தீவிரமாக நடந்து வருகிறது.

காலிங்கராயன் பாசனப் பகுதியில், 16,000 ஏக்கர் வரை நெல் சாகுபடி செய்து, தற்போது அறுவடை நிலையில் உள்ளது. கடந்த சில நாட்களாக தொடர் மழை பெய்ததால், வயல்களில் நீர் தேங்கி, அறுவடை நடக்கவில்லை. தற்போது மழை சற்று ஓய்ந்ததால், அறுவடை தீவிரமாக நடந்து வருகிறது.

சூரியம்பாளையம் பகுதி விவசாயிகள் கூறியதாவது: மழை நேரமாக இருப்பதால், கூலி வேலைக்கு ஆட்கள் கிடைக்கவில்லை. அத்துடன், ஆள் வைத்து அறுவடை செய்தால், ஓரிரு நாட்கள் ஆகும். எனவே, இயந்திரம் வைத்து அறுவடை செய்கிறோம். அரசின் நெல் கொள்முதல் நிலையங்கள்

திறக்கப்படாததால், வியாபாரிகளே நேரடியாக நெல்லை வாங்கி செல்கின்றனர். தற்போது, இட்லி குண்டு ரக நெல், கிலோ, 13 ரூபாய்க்கும், பொன்னி உட்பட பிற ரகங்கள், 14 ரூபாய்க்கும் விலை போகிறது. நெல் கொள்முதல் நிலையம் திறந்தால், சில நாட்கள் உலர வைத்து, கூடுதல் விலைக்கு விற்க வாய்ப்பு ஏற்படும். இவ்வாறு விவசாயிகள் கூறினர்.

## மாவட்டத்தில் 1134 மண் மாதிரிகள் எடுக்க திட்டம்

ஊட்டி: ஊட்டியில் உலக மண்வள தினவிழாவை முன்னிட்டு, விவசாயிகளுக்கு மண்வள அட்டை வழங்கும் விழா நடந்தது. தோட்டக்கலை துறை, மலைப்பயிர்கள் துறை சார்பில், நடந்த நிகழ்ச்சியில், தோட்டக்கலை இணை இயக்குனர் மணி வரவேற்று பேசியதாவது:மண் வளத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில், டிசம்பர், 5ல், உலக மண் வள தினம் கொண்டாடப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில், தோட்டக்கலை துறை மூலம் மண் வள அட்டை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில், ஊட்டி வட்டாரத்தில், 807 மண் மாதிரியும், குன்னூார் வட்டத்திற்கு, 543, கோத்தகிரி வட்டத்திற்கு , 518 மற்றும் கூடலுார் வட்டத்திற்கு, 1134 மண் மாதிரிகள் எடுப்பதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, பணிகள் நடந்து வருகின்றன. உலக மண் தினத்தை ஒட்டி, ஊட்டி வட்டத்தை சேர்ந்த, 100 விவசாயிகளுக்கு, மண்வள அட்டை மற்றும் இதர வட்டாரத்துக்கு, 250 மண்வள அட்டை வழங்கப்படுகிறது. தவிர, தோட்டக்கலை துறை மூலம் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சி திட்ட இயக்கத்தின் கீழ், உயர்ரக பசுமைக் குடில் அமைத்த, 5 பயனாளிகளுக்கு, 15 லட்சத்து, 22 ஆயிரத்து, 646 ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு மணி பேசினார். அர்ஜூணன் எம்.பி., தலை மை வகித்து, பயனாளிகளுக்கு மண் வள அட்டை வழங்கி, திட்டங்கள் குறித்து பேசினார். மண்வள ஆராய்ச்சியாளர்கள் கூறுகையில்,'விவசாயிகள் தங்களது தோட்டங்களில் மண்மாதிரி எடுத்து ஆய்வுக்கு அனுப்பவேண்டும். ஆய்வுக்குப்பின், மண்ணில் உள்ள அமிலத் தன்மை, கார தன்மையை அறிந்து, மண்ணில் குறைபாடுகள்

இருப்பின், அதற்கேற்ற வகையில் மண்ணை பண்படுத்தி, பயிர் செய்வதன் மூலம், கூடுதல் மகசூல் கிடைக்கும்' என்றனர். இதில், ஊட்டி மண் ஆய்வுக்கூட வேளாண் அலுவலர் ஹேமாவதி, தோட்டக்கலை உதவி இயக்குனர் மீராபாய் உட்பட அலுவலர்கள், விவசாயிகள் திரளாக பங்கேற்றனர்.

* கூடலுாரில், தோட்டக்கலை துறை சார்பில்,உலக மண்வள தினத்தை முன்னிட்டு, மண்வள அட்டை வழங்கும் விழா நடந்தது. கிடங்கு மேலாளர் ராமசாமி வரவேற்றார். விழாவுக்கு, தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் சிபிலாமேரி தலைமை வகித்து பேசுகையில்,“ரசாயன உரங்களால் மண்வளம் பாதிக்கப்படும், விவசாயிகள் மண் பரிசோதனை செய்து, இயற்கை உரங்களை பயன்படுத்தினால், பெரும் பயன் பெறலாம்,” என்றார். ஆவின் இணைய தலைவர் மில்லர், விவசாயிகளுக்கு மண்வள அட்டையை வழங்கினார். உதவி வேளாண்மை அலுவலர் அப்பிராஜ் நன்றி கூறினார்.

## விளைநிலத்தை மேம்படுத்தலாம் மண்பாதுகாப்பு விழாவில் தகவல்

பழநி:பழநி வேளாண்துறை சார்பில் கோதைமங்கலத்தில் உலக மண்வள பாதுகாப்பு தினவிழா கொண்டாடப்பட்டது. பழநி வேளாண் உதவி இயக்குனர் சுருளியப்பன் தலைமைவகித்தார். இதில் சில மாதங்களுக்கு முன் விவசாய நிலங்களிலிருந்து மண் மாதிரிகள் எடுக்கப்பட்டு மண் ஆய்வகத்தில் பரிசோதனை செய்யப்பட்டது. இதன் முடிவுகளை வேளாண்துறை இணையதளத்தில் பதிவுசெய்து, விவசாயிகளுக்கு மண் பரிசோதனை முடிவுகள் அச்சிடப்பட்ட அட்டைகள் வழங்கப்பட்டது. மண் ஆய்வு அடிப்படையில் உரங்கள் இடவேண்டும். மண்ணின் பேரூட்டம், நுண்ணூட்டம் அளவைக் கணக்கிட்டு சமச்சீர் முறையில் உரமிட்டால் உரத்தேவை குறையும், கண்மாய் வண்டல், மணல் இட்டு நிலத்தை பயிருக்கு ஏற்றவாறு மேம்படுத்தலாம். மண்ணை ஆய்வு செய்து களர், உவர், அமில தன்மை அறிந்து விவாசயம் செய்தால் மகசூல் அதிகபெறலாம் உள்ளிட்ட பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டது. துணை வேளாண் அலுவலர் துரைச்சாமி, அட்மா திட்ட

மேலாளர் கோசல்நாத், உதவி தொழிற்நுட்ப மேலாளர் மணிகண்டராஜா மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

**மழைசேதம் குறித்து தோட்டக்கலைத்துறை ஆய்வு**

கம்பம்: தேனி மாவட்டத்தில் பெய்து வரும் மழையால் கண்மாய்கள், குளங்கள் நிரம்பி வருகின்றன. மழையால் தோட்டங்களில் ஏற்பட்டுள்ள சேதங்கள் குறித்து கணக்கெடுக்கும்படி தோட்டக்கலைத்துறையினருக்கு அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி, உதவி தோட்டக்கலை அலுவலர்கள் தோட்டங்களில் ஆய்வு நடத்தி வருகின்றனர். தோட்டங்களின் உரிமையாளர்களிடம் விண்ணப்பங்களை வி.ஏ.ஓ., மூலம் பெற்று, சேத மதிப்பீடுகளை தயார் செய்து, கலெக்டரிடம் வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். அதன்படி, ஆனைமலையன்பட்டியில் மழையால் புதையுண்ட திராட்சை தோட்டத்தை அதிகாரிகள் பார்வையிட்டு சேதத்தை மதிப்பீடு செய்தனர். அதே போன்று திராட்சை, வாழை உள்ளிட்ட பயிர்களின் சேத விபரங்களை சேகரித்து வருகின்றனர்.

**விலையில்லாததால் மரத்தில் பழுக்கும் வாழைத்தார்கள்: விவசாயிகள் கவலை**

தேவதானப்பட்டி: பெரியகுளம் தாலுகாவில் அறுவடைக்கு தயாராக உள்ள வாழை தார்கள் விற்பனையாகாததால் வெட்டப்படாமல் விளைந்த மரத்திலேயே தார்கள் பழமாக பழுத்துள்ளது. இதனால் காக்கைக்கும், குருவிக்கும் உணவாக பயன்பட்டு வருகிறது. பெரியகுளம் தாலுகா, சில்வார்பட்டி, மருகால்பட்டி, குள்ளப்புரம், மேல்மங்கலம், ஜெயமங்கலம், வடுகபட்டி, பெரியகுளம், லட்சுமிபுரம், முதலக்கப்பட்டி, அ.வாடிப்பட்டி, கீழவடகரை உட்பட 30க்கும் மேற்பட்ட கிராமங்களில் வாழை சாகுபடி செய்யப்படுகிறது. ஒரு ஏக்கரில் ஆயிரம் கன்றுகள் நடவு செய்யப்படுகிறது. நடவு செய்து பத்து மாதங்களுக்கு பிறகு அறுவடை செய்யப்படும். 7 5 ஆயிரம்

ரூபாய் வரை செலவாகிறது. ஒரு தாருக்கு 200 ரூபாய் விலை கிடைத்தால் செலவு போக ஒரு லட்சம் ரூபாய் வரை லாபம் கிடைக்கும்.

வாழைத்தார் அறுவடைக்கு பிறகு தொடர்ந்து 2 ஆண்டுகளுக்கு இலை அறுவடை செய்ய லாம். பெரியகுளம் தாலுகா பகுதியில் சக்கை, பூவன் வாழை நடவு செய்யப்பட்டுள்ளது. ஒரு தாரில் நூறு முதல் நூற்று ஐம்பது பழங்கள் இருக்கும். இப்பகுதியில் விலையும் தார்கள் தேனி, ஒட்டன்சத்திரம், கேரளா, மதுரை மார்க்கெட்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

விலை வீழ்ச்சி: பத்து மாதங்களுக்கு முன்பு நடவு செய்த வாழை மரங்களில் தற்போது தார்கள் அறுவடைக்கு தயாராக உள்ளன. வியாபாரிகள் விளை நிலங்களுக்கு நேரடியாக வந்து தார்களை விலை பேசி சென்றுள்ளனர். ஆனால் பேசிய படி வியாபாரிகள் வாழை தார்களை அறுவடை செய்யவில்லை.

இதனால் முதிர்ந்த தார்கள் மரத்தில் பழுத்து வருகின்றன. பழுத்து பழமான வாழை தார்கள் காக்கை, குருவிகளுக்கு உணவாக பயன்பட்டு வருகிறது. இதனால் செலவு செய்த பணத்தைக் கூட எடுக்க முடியாமல் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். மருகால்பட்டியை விவசாயி ஆண்டவர் கூறியது: கடந்த 2 ஆண்டுகளாக மழை இல்லாமல் வறட்சி ஏற்பட்டது. அப்போது வாழை சாகுபடி செய்ய முடியவில்லை. ஆனால் கடந்த ஆண்டு ஓரளவிற்கு மழை பெய்தது. இதனால் விவசாய கிணறுகளில் ஊற்று கிடைத்தது. அதனால் வாழை சாகுபடியில் ஈடுபட்டோம். ஆனால் விலை இல்லாததால் கொள்முதல் செய்ய வியாபாரிகள் தயக்கம் காட்டி வருகின்றனர். அதனால் அறுவடைக்கு தயாராக உள்ள வாழைத்தார்கள் பழுத்துள்ளது. இதனால் காக்கை, குருவிகளுக்கு உணவாக பயன்பட்டு வருகிறது. மிகவும் வேதனையாக உள்ளது என்றார்.

### முருங்கை விளைச்சல் பாதிப்பு: கிலோ ரூ.100

ஆண்டிபட்டி : ஆண்டிபட்டி பகுதியில் கடந்த முறை வறட்சியால் முருங்கை விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டது. இந்த முறை தொடர்ச்சியான மழை பொழிவு

காரணமாக முருங்கை விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் ஒரு கிலோ 100 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஆண்டிபட்டி அருகே திம்மரசநாயக்கனூர், டி.பொம்மிநாயக்கன்பட்டி, டி.ராஜகோபாலன்பட்டி, டி.சுப்புலாபுரம், டி.சில்க்வார்பட்டி, கதிர்நரசிங்கபுரம், கொத்தப்பட்டி, ஏத்தக்கோயில், கண்டமனூர், கடமலைக்குண்டு, வருஷநாடு உட்பட பல பகுதிகளில் முருங்கை சாகுபடி உள்ளது. இப்பகுதியில் விளையும் முதல் தர முருங்கை காய்கள் அட்டைப்பெட்டிகளில் பேக்கிங் செய்யப்பட்டு சென்னை மற்றும் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படும். பின் அங்கிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும். இரண்டாம் தர முருங்கை காய்கள் உள்ளூர் தேவைகளுக்கு பயன்படுத்தப்படும். சீசன் காலங்களில் ஆண்டிபட்டி பகுதியில் இருந்து தினமும் 20 டன் அளவிலான முருங்கை காய்கள் வெளியூர்களுக்கு அனுப்பப்படும். கடந்த ஆண்டு ஏற்பட்ட வறட்சி முருங்கை விளைச்சலை பெரும் பாதிப்படைய செய்தது. சில இடங்களில் முருங்கை மரங்கள் பட்டுப்போய் விட்டன.

விவசாயிகள் முருங்கை மரங்களை காப்பாற்ற கூடுதலான செலவு செய்து டேங்கர் லாரிகள் மூலம் தண்ணீர் கொண்டு வந்து ஊற்றினர். கடந்த சில மாதங்களுக்கு முன்பு பெய்த மழையில் முருங்கை மரங்கள் பூத்து குலுங்கியது. இந்த ஆண்டு முருங்கை மூலம் கூடுதலான மகசூல் எதிர்பார்த்த விவசாயிகளுக்கு அடுத்தடுத்து பெய்த மழை பெரும் ஏமாற்றத்தை கொடுத்து விட்டது. மரங்களில் இருந்த பூக்கள், பிஞ்சுகள் உதிர்ந்து காய்ப்புத்தன்மை முற்றிலும் நின்று விட்டது. தொடர்ச்சியாக பெய்த மழையால் மரங்களின் அடிப்பகுதியில் நீர் தேங்கி வேர் அழுகல் நோய் ஏற்பட்டு மரங்கள் பாதிப்படைந்தது. தற்போதுள்ள சூழலில் முருங்கை காய்கள் கிலோ ரூபாய் 80 முதல் 100 வரை விலை போகிறது. தரமான விலை இருந்தும், விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

பாதிப்படைந்த விவசாயிகள் கூறியதாவது: சில மாதங்களாக முருங்கை காய்களுக்கு தரமான விலை கிடைத்து வருகிறது. இதனால் ஆண்டிபட்டி பகுதியில் பல விவசாயிகள் முருங்கை சாகுபடிக்கு மாறி உள்ளனர். வறட்சி ஏற்பட்ட காலத்தில் கூடுதல் செலவு செய்து, மரங்களை காப்பாற்றி மகசூல் செய்யும் நிலை இருந்தது. தற்போது, அதற்கும் வழி இல்லாமல் மரங்களே

பாதிப்படையும் நிலை ஏற்பட்டுள்ளது. முருங்கை மரங்களில் மீண்டும் மகசூல் எடுக்க இன்னும் சில மாதங்கள் ஆகி விடும் என்றனர்.

## வேளாண் துறை ஆலோசனை

திருப்புவனம்: திருப்புவனம் வட்டாரத்தில் முக்குடி, காஞ்சிரங்குளம் உள்ளிட்ட எல்லையோர கிராமங்களில் 125 ஏக்கரில் வெங்காய சாகுபடி நடைபெறுகிறது. நவம்பர், டிசம்பர் மாதங்களில் வெங்காய செடியில் இலைபேன் நோய் தாக்குதல் ஆரம்பமாகும். இதனை தடுக்க ஒரு எக்டேருக்கு300 மி.லி., பாஸ்மோமிடன் மருந்தை தெளிக்க வேண்டும். அதிகளவு தழைச்சத்து இடுவதை தவிர்க்க வேண்டும் என தோட்டக்கலைதுறை உதவி இயக்குநர் கல்யாணசுந்தரம் தெரிவித்துள்ளார்.

## கீழச்சிவல்பட்டியில் காய்கறி சேகரிப்பு மையம் துவக்கம்

திருப்புத்தூர்: திருப்புத்தூர் அருகே கீழச்சிவல்பட்டியில் தோட்டக்கலைத்துறை சார்பில்காய்கறி சேகரிப்பு மையம் துவக்கப்பட்டது. பெருநகர காய்கறி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் திருப்புத்தூர் மற்றும் கீழச்சிவல்பட்டியில் காய்கறி சேகரிப்பு மையங்கள் துவக்க அனுமதியாகியுள்ளது. முதலில் கீழச்சிவல்பட்டியில் துவக்கப்பட்டுள்ளது. கீழச்சிவல்பட்டி, தெக்கூர்,வஞ்சினிப்பட்டி, துவார், நெற்குப்பை பகுதி விவசாயிகளின் காய்கறி இங்கு சேகரிக்கப்படும். இம்மையத்தில் 15 முதல் 20 விவசாயிகள் உறுப்பினர்களாகக் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு

நேமம் அரசு தோட்டக்கலை பண்ணையிலிருந்து, வீரிய ஒட்டு தக்காளி,கத்தரி,மிளகாய் நாற்றுகள் மானிய விலையில் வழங்கப்பட்டு,விளைந்த காய்கறிகள் ஒருங்கிணைப்பாளர் மூலம் சேகரிக்கப்படும். பின்னர் பெரு நகரங்களுக்கு விற்பனைக்கு அனுப்பப்படும். துவக்க நாளன்று உதவி இயக்குநர் அழகுமலை, அலுவலர் வடிவேல், உதவி அலுவலர்கள் காசிநாதன்,காமாட்சி பங்கேற்றனர். ஒரு டன் காய்கறி சேகரிக்கப்பட்டு, விற்பனைக்கு அனுப்பப்பட்டது.

## உலக மண் வள தின விழா

தேவகோட்டை: வேளாண்மைத்துறை சார்பில் உலக மண் வளத்தினத்தை முன்னிட்டு தேவகோட்டை ஒன்றியம் தளக்காவயல் கிராமத்தில் விழிப்புணர்வு முகாம் நடந்தது. ஒன்றிய தலைவர் சவுந்தரம் தலைமை வகித்தார். ஊராட்சி தலைவர் காளியம்மாள் முன்னிலை வகித்தார். துணை வேளாண்மை அலுவலர் ஓம்குமார் வரவேற்றார். வேளாண்மை உதவி இயக்குநர் பாஸ்கரமணியன் பேசினார்.விவசாயிகளுக்கு மண்வள அட்டைகளை ஒன்றிய தலைவர் வழங்கினார். உதவி விதை அலுவலர் ஞானசேகரன், வட்டார தொழில்நுட்ப மேலாளர் சூர்யா, உதவி வேளாண் அலுவலர்கள் சிக்கந்தர்பாட்ஷா, முருகானந்தம், செல்வி, தொழில் நுட்ப உதவி மேலாளர் பாலமுருகன் ,உழவன் நண்பர்களாக தர்மலிங்கம்,பாண்டி,பழனி பங்கேற்றனர்.


## விவசாய கருத்தரங்கு

ஆர்.எஸ்.மங்கலம்: ஆர்.எஸ்.மங்கலம் அருகே சீவலாதியில் அய்யனார் விளையாட்டு குழு சார்பில் இயற்கை விவசாய கருத்தரங்கு நடைபெற்றது.

நம்மாழ்வார் அறக்கட்டளை இயற்கை விவசாய பயிற்சி மாணவர் பிரசாத்மணி தலைமை வகித்தார். முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர்கள் ராமன், சுப்பிரமணியன் முன்னிலை வகித்தனர். நம்மாழ்வார் வானகம் அறக்கட்டளை பயிற்சி மாணவர்கள் ஏங்கல்ஸ்ராஜா,வெற்றிமாறன் ஆகியோர் இயற்கை விவசாயம், ரசாயண உரங்களால் ஏற்படும் பாதிப்பு குறித்து பேசினர். இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட காய்கறி விதைகள் விசாயிகளுக்கு வழங்கப்பட்டன. செங்குடி, சாத்தனூர், பூலாங்குடி பகுதி விவசாயிகள் பங்கேற்றனர்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## 2 நாள்களுக்கு பலத்த மழை எச்சரிக்கை: புதிய காற்றழுத்தத் தாழ்வு நிலை



தென் மேற்கு வங்கக் கடலில் புதிதாக காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகியுள்ளது. ஏற்கெனவே சில நாள்களுக்கு முன் உருவான காற்றழுத்தத் தாழ்வு நிலை கன்னியாகுமரி கடலில் நிலை கொண்டுள்ளது. இந்த இரு நிலைகளால் தமிழகத்தின் வட கடலோர மாவட்டங்களில் 2 நாள்களுக்கு மிக பலத்த மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. இதனால், ஏற்கெனவே கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள சென்னை, காஞ்சிபுரம், கடலூர், திருவள்ளூர் மாவட்ட மக்களை அச்சம் அடையச் செய்துள்ளது.

மழை எச்சரிக்கை குறித்து சென்னை வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டலத் தலைமை இயக்குநர் எஸ்.பாகுலேயன் தம்பி ஞாயிற்றுக்கிழமை கூறியதாவது:

கடந்த சில நாள்களுக்கு முன் உருவான காற்றழுத்தத் தாழ்வு பகுதி, ஞாயிற்றுக்கிழமை வலுவிழந்து, கன்னியாகுமரி கடல் பகுதியில் காற்றழுத்தத் தாழ்வாக மாறி அதே இடத்தில் நிலை கொண்டுள்ளது. இந்த நிலையில், தென்மேற்கு வங்கக் கடல் பகுதியில், ஒரு புதிய காற்றழுத்தத் தாழ்வு நிலை

உருவாகியுள்ளது.

மிகப் பலத்த மழைக்கு வாய்ப்பு: இரு நிலைகள் காரணமாக, அடுத்த 24 மணி நேரத்தில், தமிழகம், புதுச்சேரியில் பெரும்பாலான இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. குறிப்பாக, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர், நாகை உள்ளிட்ட வட கடலோர மாவட்டங்களில், பலத்த, மிக பலத்த மழையும் பெய்யும். சென்னையில் இருந்து வேதாரண்யம் வரையிலான கடலோர மாவட்டங்களில், 60 மி.மீ. முதல் 120 மி.மீ. வரை மழை பெய்யும் வாய்ப்புண்டு. உள் மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் பலத்த மழை பெய்யும். சென்னை மாநகரில் விட்டு விட்டு மழை பெய்யும். ஒரு சில நேரங்களில், மழை அல்லது இடியுடன் கூடிய பலத்த மழை இருக்கும். பலத்த காற்று எச்சரிக்கை: கடலோரப் பகுதியில், வடகிழக்கு திசையிலிருந்து மணிக்கு 45 முதல் 55 கி.மீ வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும். இதனால், மீனவர்கள் கடலுக்குள் எச்சரிக்கையுடன் செல்ல வேண்டும் என்றார் பாகுலேயன் தம்பி. அத்தியாவசியப் பொருள்கள் விநியோகம்: இதற்கிடையே, சென்னையில் கடந்த 3 நாள்களாக மழை சற்று ஓய்ந்திருந்ததால் சனிக்கிழமை (டிச. 5) முதல் மெல்ல இயல்பு நிலை திரும்பி வருகிறது. பால், பெட்ரோல், டீசல், உள்ளிட்ட அத்தியாவசப் பொருள்கள் தட்டுப்பாடு குறைந்து விநியோகம் சீரடைந்து வருகிறது. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளும், தனியார் வங்கிகளும் ஞாயிற்றுக்கிழமை விடுமுறையிலும் செயல்பட்டன. 50 சதவீதம் ஏ.டி.எம்.கள் செயல்பட்டன. பால், தயிர் விநியோகம் ஓரளவு சீரடைந்து வந்தது. ஞாயிற்றுக்கிழமை 70 சதவீதத்துக்கு மேற்பட்ட பெட்ரோல் விற்பனை நிலையங்களில் செயல்பட்டன. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு அனைத்தையும் இழந்த மக்களுக்கு நூற்றுக்கணக்கான தன்னார்வ அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள் நிவாரணப் பொருள்களை வழங்கி வருகின்றன. ஆனாலும், இந்த நிவாரணப் பொருள்களை முறையாக வழங்குவதற்கு எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை.

படிப்படியாக மின் விநியோகம்: வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட சென்னை நகரில் மின் விநியோகம் படிப்படியாக சீரமைக்கப்பட்டு வருகிறது. ஆனால், இன்னும் வெள்ள நீர் சூழ்ந்துள்ள மணலி, எம்.கே.பி. நகர், சிட்கோ

நகர், முடிச்சூர், அனகாபுத்தூர், மடிப்பாக்கம், சோழிங்கநல்லூர், செம்மஞ்சேரி, எம்.எம்.டி.ஏ. காலனி, அரும்பாக்கம், மேற்கு மாம்பலம், வேளச்சேரி உள்ளிட்ட இடங்களில் இன்னும் வெள்ள நீர் வடியாததால் மின் விநியோகம் வழங்கப்படவில்லை.

மீண்டும் ரயில், விமான சேவை: நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரயில் சேவைகள் திங்கள்கிழமை (டிச. 7) முதல் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. அதுபோல் கடந்த டிசம்பர் 2 முதல் மூடப்பட்டிருந்த சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் ஞாயிற்றுக்கிழமை முதல் மீண்டும் செயல்படத் தொடங்கியது. புறநகர் மின் ரயில்களும் இயக்கப்பட்டு வருகின்றன. சாலைகள் மோசமாக இருந்தாலும் பேருந்து போக்குவரத்து இயல்பு நிலைக்கு திரும்பி உள்ளது. இந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை காலை முதல் மீண்டும் மழை பெய்த தொடங்கியதால் மீட்புப் பணிகளும் நிவாரணப் பணிகளும் பாதிக்கப்பட்டுள்ளன. மேலும் 2 நாள்கள் பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது என வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளதால், அமைச்சர்கள், அதிகாரிகள், தேசிய பேரிடர் மீட்புப் படை, போலீஸார், ஆகியோர் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். அத்தியாவசியப் பொருள்கள் தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

### 14 லட்சம் பேர் பத்திரமாக மீட்பு

சென்னை, புறநகர் பகுதிகளில் வெள்ளம் பாதித்த பகுதிகளிலிருந்து 14 லட்சத்து 32 ஆயிரத்து 924 பேர் மீட்கப்பட்டு, நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது. வெள்ளம் பாதித்த பகுதிகளிலிருந்து மீட்கப்பட்டோர் 14,32,924. மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள படகுகள் 600. நிவாரண மையங்கள் 5,554. விநியோகிக்கப்பட்ட உணவுப் பொட்டலங்கள் 85,98,280. நடத்தப்பட்ட மருத்துவ முகாம்கள் 24,220. முகாம்களில் பயன்பெற்றவர்கள் 20,17,244. கால்நடை மருத்துவ முகாம்கள் 1,536. சிகிச்சை பெற்ற கால்நடைகள் 1,55,007. முகாம்களில்விநியோகிக்கப்பட்ட பால்பவுடர் 453 மெட்ரிக் டன்

**4 மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை**

வெள்ளப் பாதிப்பு, பலத்த மழை ஆகிய காரணங்களால் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர் ஆகிய 4 மாவட்டங்களில் உள்ள பள்ளி, கல்லூரிகளுக்கு திங்கள்கிழமை (டிச. 7) விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. நவம்பர் 6-ஆம் தேதிக்குப் பிறகு தொடர் மழையால், நீண்ட விடுமுறை அறிவிக்கப்பட்டது. அதன்பிறகு, நவம்பர் 26, 27, 28 ஆகிய தேதிகளில் மட்டும் பள்ளிகள் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. புதுச்சேரி, காரைக்காலில் பள்ளிகளுக்கு இன்று விடுமுறை: புதுச்சேரி, காரைக்காலில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக, இரு மாவட்டங்களிலும் உள்ள அரசு, தனியார் பள்ளிகளுக்கு திங்கள்கிழமை விடுமுறை அளிக்கப்படுவதாக, புதுச்சேரி முதல்வர் என்.ரங்கசாமி காரைக்காலில் ஞாயிற்றுக்கிழமை அறிவித்தார்.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் இரு வாரங்களில் 100 அடியை எட்டும்**

காவிரி டெல்டா பாசனத்துக்குக் குறைவான அளவில் தண்ணீர் திறந்துவிடப்படுவதால், இரு வாரங்களில் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 100 அடியை எட்டும் என்று பொதுப் பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். கர்நாடக மாநிலத்தில் காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால், மேட்டூர் அணைக்கு தொடர்ந்து நீர்வரத்து இருந்து வருகிறது. இந்த நிலையில், காவிரி டெல்டா மாவட்டங்களில் மழை பெய்து வருவதால், மேட்டூர் அணையில் இருந்து நொடிக்கு 500 கன அடி வீதம் மட்டுமே பாசனத்துக்குத் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. இதனால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. இந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை காலை அணையின் நீர்மட்டம் 94.82 அடியாக உயர்ந்தது. அணைக்கு நொடிக்கு 6,626 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு நொடிக்கு 500 கன அடி வீதமும், கிழக்கு மேற்குக் கால்வாய்ப் பாசனத்துக்கு நொடிக்கு 200 கன அடி வீதமும் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. அணையின்

நீர் இருப்பு 58.33 டிஎம்.சி.யாக இருந்தது. அணையின் நீர் வரத்தும், நீர் திறப்பும் இதே நிலையில் இருந்தால் இன்னும் இரு வாரங்களில் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 100 அடியை எட்டும் என்று பொதுப் பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**பயிர்களில் உரக்கரைசல் தெளிக்க செயல்விளக்கம்**

வத்தலகுண்டு பகுதி விவசாயிகளுக்கு பயறுவகைப் பயிர்களில் உரக்கரைசல் தெளிப்பு குறித்த செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு வட்டாரம் வெறியப்பநாயக்கன்பட்டி, பூசாரிபட்டி, சாந்திபுரம், குன்னுவாரன்கோட்டை, சேவுகம்பட்டி ஆகிய கிராமங்களில் என்.ஏ.டி.பி. திட்டத்தின் கீழ் இந்த செயல்முறை விளக்கம் செவ்வாய்கிழமை நடைபெற்றது. வத்தலகுண்டு வேளாண்மை உதவி இயக்குநர் கோபால்ராஜ் பங்கேற்று, டி.ஏ.பி. உரக்கரைசல் தெளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து விளக்கினார்.

டி.ஏ.பி. கரைசலை உளுந்து, பாசிப்பயறு, தட்டைப்பயறு, கொள்ளு முதலான பயிர்களில் பூ பூக்கும் தருணம் மற்றும் 10 முதல் 15 நாட்கள் கழித்து 2 ஆம் முறையும் இலை வழியாக தெளிப்பதால் நேரடியாக சத்துகள் விரைவாக சென்றடைந்து அதிகமான பூக்கள் உருவாகி திரட்சியான பொக்கற்ற காய்கள் வரப்பெற்று மகசூல் அதிகரிக்கும் என்றார் அவர். இந்நிகழ்ச்சியை வேளாண் துறை துணை இயக்குநர் (மத்திய திட்டம்) மேற்பார்வையிட்டார்.மேலும் தேனி குள்ளப்புரம் வேளாண் தொழில்நுட்பக் கல்லூரி மாணவிகள் கிராமத் தங்கல் திட்டத்தின் அங்கமாக இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

**பயிர் விளைச்சல் போட்டி: ஆர்வமுள்ள விவசாயிகள் விண்ணப்பிக்க அழைப்பு**

பயிர் விளைச்சல் போட்டியில் பங்கேற்க விரும்பும் திண்டுக்கல் மாவட்ட விவசாயிகள், அந்தந்தப் பகுதியில் உள்ள வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்களை தொடர்பு கொள்ளலாம் என, வேளாண்மைத் துணை இயக்குநர் (மாநில திட்டம்) மு. தங்கசாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: திண்டுக்கல் மாவட்டத்தில், நவம்பர் 30ஆம் தேதி வரை 7 ஆயிரம் ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அதேபால், சிறுதானியம் 60 ஆயிரம் ஹெக்டேர், பயறு வகைகள் 25 ஆயிரம் ஹெக்டேரிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

பயிர் விளைச்சல் போட்டி திட்டத்தில், நெல், மக்காச்சோளம், நிலக்கடலை, கம்பு, சோளம் ஆகிய பயிர்களை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் பங்கேற்கலாம். நெல் மற்றும் நிலக்கடலை விவசாயிகள் மாநிலப் போட்டிக்கு ரூ. 100, மாவட்டப் போட்டிக்கு ரூ. 50 கட்டணமாக செலுத்த வேண்டும். பிற பயிர்களுக்கு மாநிலப் போட்டிக்கு ரூ. 50, மாவட்டப் போட்டிக்கு ரூ. 25 பதிவு கட்டணமாகச் செல்லுத்த வேண்டும். மாநில அளவிலான போட்டிக்கு, வேளாண்மை இயக்குநர் (சென்னை) மூலம் தேர்வு செய்யப்படும் விவசாயப் பிரதிநிதி, இயக்குநர் அலுவலகப் பிரதிநிதி, மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பிரதிநிதி, வேளாண்மை துணை இயக்குநர் (மாநில திட்டம்) ஆகியோர் கொண்ட குழுவினர், மகசூல் குறித்து ஆய்வு செய்வர். அதேபோல், மாவட்டப் போட்டிக்கு, மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பிரதிநிதி, வேளாண்மைத் துணை இயக்குநர் (மாநில திட்டம்), மாவட்ட ஆட்சியர் மூலம் பரிந்துரை செய்யப்படும் 3 விவசாயப் பிரதிநிதிகள் கொண்ட குழுவினர் நடுவர்களாக நியமிக்கப்படுவர்.

50 சென்ட் நிலத்தில் அறுவடை செய்யப்படும் மகசூல் கணக்கிடப்பட்டு, வெற்றியாளர்கள் தேர்வு செய்யப்படுவர். நெல் மற்றும் நிலக்கடலைக்கு மாநில அளவில் முதல் பரிசாக ரூ. 25 ஆயிரம், மாவட்ட அளவில் ரூ. 15 ஆயிரம் வீதம் பரிசுத் தொகை வழங்கப்படும். 2ஆம் பரிசாக மாநில அளவில் ரூ. 15 ஆயிரம், மாவட்ட அளவில் ரூ. 10 ஆயிரம் வழங்கப்படும். பிற பயிர்களுக்கு முதல் பரிசாக ரூ. 15 ஆயிரம் (மாநிலம்), ரூ. 10 ஆயிரம்(மாவட்டம்), 2ஆவது பரிசாக ரூ. 10 ஆயிரம் (மாநிலம்), ரூ. 5 ஆயிரம் (மாவட்டம்) வீதம் பரிசுத் தொகை வழங்கப்படும். ஆர்வமுள்ள விவசாயிகள், போட்டிக்கு விண்ணப்பிக்கலாம் என்றார் அவர்.

**உலக மண்வள பாதுகாப்பு தினம்**

பழனியை அடுத்த கோதைமங்கலம் கிராமத்தில் சனிக்கிழமை உலக மண்வள பாதுகாப்பு தினம் கொண்டாடப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபையின் அறிவுறுத்தலின்படி, டிசம்பர் 5ஆம் தேதியை உலக மண்வள பாதுகாப்பு தினமாகக் கொண்டாடப்படுகிறது. இதை முன்னிட்டு, பழனி வேளாண் துறை சார்பில், கோதைமங்கலத்தில் உலக மண்வள பாதுகாப்பு தினம் கொண்டாடப்பட்டது. இதில், விவசாயிகள் நிலங்களில் மண் பரிசோதனை செய்யப்பட்டு, அதன் முடிவுகள் வேளாண் துறை இணையதளத்தில் வெளியிடப்பட்டதுடன், அவர்களுக்கு மண் பரிசோதனை முடிவுகள் சான்றிதழாக வழங்கப்பட்டன. மேலும், மண் ஆய்வு செய்து உரமிடுவதன் அவசியம், மண்ணின் நுண்ணூட்ட அளவை கணக்கிட்டு சமச்சீர் முறையில் உரமிட்டு, மண்ணின் தன்மையைப் பாதுகாக்கவும் விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டன. தொடர்ந்து, விவசாயிகளின் கேள்விகளுக்கு பதிலளிக்கப்பட்டது. நிகழ்ச்சியில், பழனி வேளாண்துறை உதவி இயக்குநர் சுருளியப்பன், அட்மா திட்ட மேலாளர் கோசல் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**மழையால் மீண்டும் முளைத்த நெல் பயிர்கள்: விவசாயிகள் வேதனை**



காஞ்சிபுரத்தை அடுத்த பெரியநத்தம் அருகே மழையால் பாதிக்கப்பட்டுள்ள நெல் பயிர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழையால் நன்றாக விளைந்து அறுவடைக்குத் தயாரான நெல் பயிர்கள் பல்வேறு இடங்களில் நீரில் மூழ்கி முளைத்து வருவதால் விவசாயிகள் கவலையில் உள்ளனர். தொடர்மழை காரணமாக விளைந்த நெல் பயிர்களை அறுவடை செய்ய

முடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர். நெல் பயிர்கள் நிலத்தில் இருக்கும் நிலையில் மழை நீரில் மூழ்கி அழுகி வீணாகும் வாய்ப்பு உள்ளதால், சிலர் அறுவடை செய்து வந்து களத்தில் வைத்துள்ளனர். மழை ஓய்ந்தால் நெல் கதிரில் இருந்து நெல்லைப் பிரித்தெடுக்க விவசாயிகள் காத்திருக்கின்றனர். ஆனால் மழை விடாமல் பெய்வதால் நீரில் மூழ்கிய நெல் பயிர்கள், அறுவடை செய்யப்பட்ட நெல் பயிர்கள் அனைத்தும் முளைத்து வருகின்றன. இதனால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர். இதுகுறித்து களக்காட்டூர் பகுதியைச் சேர்ந்த விவசாயி ஒருவர் கூறியதாவது: எனது மனைவியின் நகைகளை அடகு வைத்துத்தான் இந்த நெல் பயிரை விளைவித்தேன். தொடர் மழை காரணமாக நன்றாக விளைந்த நெல் பயிர்கள் முளைத்து வருகின்றன. கைக்கு எட்டியது, வாய்க்கு எட்டவில்லை என்ற நிலை ஆகிவிட்டது. வாங்கிய கடனுக்கு எவ்வாறு வட்டிக் கட்டுவது என்பது கூட தெரியவில்லை என்றார். இதுபோல் மாவட்டம் முழுவதும் சுமார் 10 ஆயிரம் ஏக்கர் அளவுக்கு நன்றாக விளைந்த நெல் பயிர்கள் நீரில் மூழ்கிய நிலையில் உள்ளன. மேலும் பல்வேறு இடங்களில் நாற்று நட்ட நிலையிலும், நெல் பயிர்கள் பாதி விளைந்த நிலையிலும் நீரில் மூழ்கி உள்ளன. இதனால் விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**மண்ணின் தன்மைக்கு ஏற்ப பயிர் செய்தால் அதிக லாபம் பெறலாம்: ஆட்சியர்**

மண்ணின் தன்மை அறிந்து அதற்கேற்ற பயிர் செய்தால் விவசாயிகள் கூடுதல் லாபம் பெறலாம் என மாவட்ட ஆட்சியர் வே. ராஜாராமன் தெரிவித்தார்.

விருதுநகர் அருகே சூலக்கரையில் சனிக்கிழமை நடைபெற்ற உலக மண் வள தின விழாவில் அவர் பேசியது: நீடித்த நிலையான வேளாண்மைக்கு மண் ஆய்வு செய்தல் அவசியம். அறிவியல் பூர்வமான விவசாயத்தின் முதல் படி மண் ஆய்வு தான். வேளாண்மைக்கான தேசிய இயக்கத்தின் கீழ் மண் வள அட்டை இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மண் மாதிரிகளை சேகரித்து, ஆய்வு செய்து ஒருங்கிணைந்த உரப்பரிந்துரை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கம். மண்ணில் உள்ள தழை, மணி, சாம்பல் போன்ற முக்கிய சத்துகளையும், கால்சியம், மெக்னீசியம், கந்தகம் போன்ற இரண்டாம் நிலை சத்துக்களையும்,

தாமிரம், துத்தநாகம், போரான், மக்னீசியம் போன்ற நுண்சத்துகளையும், அமிலம், உவர் மற்றும் சுண்ணாம்புத் தன்மைகளையும் கண்டறிந்து மண்வள அட்டை மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இதன் மூலம் விவசாயிகளின் உரச் செலவு, உரமிடுதலின் அளவு குறைகிறது. எனவே மண்ணின் தன்மைக்கேற்ப பயிரினை தேர்ந்தேடுத்து பயிரிட்டால் அதிக மகசூல் பெற்று அதிக லாபம் ஈட்ட முடியும் என்றார்.

முன்னதாக வேளாண்மை, வேளாண்மை பொறியியல், தோட்டக்கலைத்துறைகள் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கருத்துக் கண்காட்சியை அவர் திறந்து வைத்து,மானிய உதவியுடன் கூடிய கருவிகளை விவசாயிகளுக்கு வழங்கினார். நிகழ்ச்சியில், விருதுநகர் சட்டப்பேரவை உறுப்பினர் கா.பாண்டியராஜன், வேளாண் துறை இணை இயக்குநர் கனகராஜன், துணை இயக்குநர் (பயிறு, விதை, எண்ணெய் வித்து) வன்னிய ராஜன், துணை இயக்குநர் வேளாண்மை விற்பனை முத்து முனியாண்டி உட்பட விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

**கோவையில் மழை: இயல்பு வாழ்க்கை பாதிப்பு**

கோவையின் பல்வேறு பகுதிகளில் இரண்டாவது நாளாக மழை பெய்ததால் ஞாயிற்றுக்கிழமை பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

கோவையில் பல்வேறு பகுதிகளில் பரவலாக சனிக்கிழமை மாலை முதல் சாரல் மழை பெய்தது. இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. இதைத் தொடர்ந்து, மாலை 5 மணி முதல் கோவையின் முக்கியப் பகுதிகளான காந்திபுரம், உக்கடம், சிங்காநல்லூர் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் ஓரளவு மழை பெய்தது. இந்த மழையால் அவிநாசி மேம்பாலம், வடகோவை மேம்பாலம், உக்கடம் புறவழிச் சாலை, ரயில்நிலையம் உள்ளிட்ட இடங்களில் மழை நீர் அதிக அளவில் சாலையில் வழிந்தோடியது.

இதனால், அந்தப் பகுதிகளில் சென்ற இரு மற்றும் நான்கு சக்கர வாகன ஓட்டிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அதேபோல், புறநகர்ப் பகுதிகளான சூலூர், சோமனூர், பட்டணம், ஒண்டிப்புதூர், மதுக்கரை, வாளையாறு உள்ளிட்ட பகுதிகளில் மழை பெய்தது.

**பெ.நா.பாளையத்தில் பலத்த மழை**

பெரியநாயக்கன்பாளையத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை பலத்த மழை பெய்தது. ஒவ்வொரு வாரமும் பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி மைதானம் அருகில் வாரச்சந்தை ஞாயிற்றுக்கிழமை நடப்பது வழக்கம்.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் பலத்த மழை பெய்யத் தொடங்கியதால், வியாபாரிகள் நனைந்தபடியே வியாபாரத்தில் ஈடுபட்டனர். மழை காரணமாக, பொதுமக்கள் வருகை குறைவாகவே காணப்பட்டது. இதனால், வியாபாரிகள் கடும் பாதிப்படைந்தனர்.

**பி.ஏ.பி. வாய்க்கால் உடைப்பால் கடைமடை விவசாயிகள் பாதிப்பு**

குண்டடம் அருகே பி.ஏ.பி. வாய்க்காலில் உடைப்பு ஏற்பட்டு, தண்ணீர் வீணானதால் கடைமடை விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குண்டடம் அருகே நந்தவனம்பாளையம் வழியாக சடையபாளையம், ஒட்டபாளையம் பகுதிக்கு செல்லும் பி.ஏ.பி. வாய்க்காலில் காணிக்கம்பட்டி அருகே ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பாலத்தில் அடைப்பு ஏற்பட்டது. இதனால், வாய்க்கால் கரை உடைந்து அருகில் உள்ள தோட்டங்களுக்குள் தண்ணீர் பாய்ந்தது. இதுகுறித்து, பொதுப் பணித் துறை இளநிலைப் பொறியாளருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அங்கு வந்த அதிகாரிகள் குழுவினர், பொக்லைன் இயந்திரம் மூலமாக அடைப்பை சரிசெய்யும் பணியில் ஈடுபட்டனர். சுமார் 3 மணி நேரத்திற்கு பிறகு அடைப்பு சரிசெய்யப்பட்டு, வாய்க்காலில் தண்ணீர் சீராகச் செல்ல வழிவகை செய்யப்பட்டது. எனினும், பல லட்சம் லிட்டர் தண்ணீர் வீணாகியதுடன், கடைமடைப் பகுதி விளைநிலங்களுக்குத் தண்ணீர் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டது.

இதுகுறித்து கடைமடைப் பகுதி விவசாயிகள் தரப்பில் கூறியதாவது: ஒவ்வோர் ஆண்டும் இந்த இடத்தில் திட்டமிட்டு வாய்க்காலில் அடைப்பை ஏற்படுத்தி, அதை உடைத்து விடுகின்றனர். தற்போதும், திட்டமிட்டுதான் இரவு நேரத்தில் வாழை மரங்கள், கற்களைக் கொண்டு அடைப்பை ஏற்படுத்தி, வாய்க்காலில் உடைப்பு உண்டாக்கி தண்ணீரை பாதை மாற்றிவிடுகின்றனர். எனவே, இந்தப்

பாலத்தை அகற்றி, கான்கிரீட் பாலம் அமைக்க பொதுப் பணித் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றனர்.

**பல்லடம் பகுதியில் ஆயிரம் ஏக்கரில் வெங்காயப் பயிர்கள் நாசம்: நஷ்டஈடு கோரும் விவசாயிகள்**

பல்லடம் பகுதியில் தொடர் மழையால் சின்ன வெங்காயப் பயிர்கள் அழுகி, கடும் பாதிப்பை ஏற்பட்டுள்ளது. இதற்கு, அரசு நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்று வெங்காய சாகுபடி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பல்லடம், பொங்கலூர், சுல்தான்பேட்டை வட்டாரப் பகுதிகளில் 10,000 ஏக்கர் பரப்பளவில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆகஸ்ட் மாதத்தில் வெங்காயத்துக்கு கூடுதல் விலை கிடைத்ததால் வெங்காய சாகுபடி செய்வதற்கு விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டினர். தற்போது, வெங்காயப் பயிர் அறுவடைக்கு தயாராக இருந்த நிலையில், தொடர்ந்து மழை பெய்ததால் சின்ன வெங்காயப் பயிர்கள் பாதிப்படைந்துள்ளன. இதனால், சராசரி மகசூலில் பாதியளவு வெங்காயப் பயிர்கள் அழுகி, நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது. வெங்காயத்தை இருப்பு வைக்க முடியாமல் வியாபாரிகள் கேட்கும் விலைக்கு விற்க வேண்டிய நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். இதுகுறித்து, தமிழகக் கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்கத்தின் திருப்பூர் மாவட்டச் செயலாளர் ஆட்டையாம்பாளையம் ஈஸ்வரன் கூறியது: சின்ன வெங்காயம் கிலோ ரூ. 50 வரை விற்றதால், தற்போது அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டது. விதை, உரம் என ஏக்கருக்கு ரூ. 60 ஆயிரம் வரை செலவானது. பயிர் வளர்ந்து அறுவடைக்குத் தயாராகும் நிலையில், தொடர்ந்து மழை பெய்ததால் தண்ணீர் தேங்கியும், வெங்காயத் தாள்களுக்குள் நீர் புகுந்தும் வெங்காயப் பயிர்கள் அழுகியுள்ளன. சராசரியாக ஏக்கருக்கு 5,000 கிலோ வரை மகசூல் கிடைக்கும். தற்போது மழை பாதிப்பால் ஏக்கருக்கு 2,500 கிலோ வெங்காயம்தான் கிடைக்கிறது. மழையில் சிக்கி, பாதிப்படைந்த வெங்காயம் என்பதால் அதனை கொள்முதல் செய்வதற்கு வியாபாரிகள் தயங்குகின்றனர். கிலோவுக்கு ரூ. 20 மட்டுமே விலை கிடைக்கிறது. மகசூல் குறைவு, அழுகல், விலை குறைவு காரணமாக சின்ன வெங்காயம் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இதுகுறித்து

வேளாண்மைத் துறை, வருவாய்த் துறை அதிகாரிகள் கள ஆய்வு செய்து விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

**புகையிலை சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் குறைவு**

பல்லடம் சுற்றுவட்டாரப் பகுதியில், புகையிலைக்கு நிலையான வருமானம் கிடைக்காததால் புகையிலை சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டுவதில்லை. பல்லடம் பகுதியில் புகையிலை சாகுபடிக்கு கார்த்திகை பட்டம் சிறந்த தருணம் ஆகும். இதற்காக, புரட்டாசி மாதத்திலேயே நாற்றங்கால் தயாரித்து கார்த்திகை துவங்கியதும் நடவு செய்யும் பணி மேற்கொள்ளப்படும். தை மாதம் அறுவடைக்கு வரும். புகையிலை சாகுபடி முதல் அறுவடை வரை ஏற்பட்ட தொழிலாளர்கள் பற்றாக்குறையால் நாளடைவில் விவசாயிகள் தென்னை, வெங்காய சாகுபடிக்கு மாறிவிட்டனர்.

மேலும், ரியல் எஸ்டேட் தொழிலாலும் புகையிலை சாகுபடி பரப்பு மிகவும் குறைந்தது.

புகையிலையை அதிகளவில் நோய் தாக்காது. ஆலங்கட்டி மழை பெய்தால் மட்டுமே சேதம் ஏற்படும். புகையிலை விலை ஏற்ற, இறக்கம் காரணமாகவும், நிலையான விலை இன்மையால் அறுவடை சமயத்தில் விலை வீழ்ச்சி அடைவதாலும் பல்லடம் சுற்று வட்டாரப் பகுதியில் புகையிலை சாகுபடி செய்ய ஆர்வம் குறைந்து வருவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**ஈரோடு மாவட்டத்தில் பரவலாக மழை**

ஈரோடு மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை பரவலாக மழை பெய்தது.

ஈரோட்டில் கடந்த மூன்று நாள்களாக வெயில் அடித்து வந்த நிலையில் சனிக்கிழமை மாலை ஆரம்பித்த பலத்த மழை இரவு முழுவதும் பெய்தது. இதேபோல, மாவட்டம் முழுவதும் ஞாயிற்றுக்கிழமை பரவலாக மழை பெய்தது. ஈரோடு மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி நிலவரப்படி மழை அளவு (மி.மீட்டரில்), சிவகிரியில் 23, முத்தூர் 14, கொடுமுடியில் 13.6, மொடக்குறிச்சியில் 13, பவானி 11, ஓலப்பாளையம் 10, ஈரோடு 9, கவுந்தப்பாடி 9, அரச்சலூர் 9, ஒரத்துப்பாளையம் 8, சென்னிமலை 7.4,

பெருந்துறை 7, கோபி5.3, ஏலந்தக்குட்டைமேடு 5, கொடிவேரி4.2, பவானிசாகர் 2.2, சத்தி 2.

**தேயிலைத் தூள் ரூ. 3 உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி**

குன்னூர் அரசு கூட்டுறவுத் தேயிலை ஏல மையத்தில் அனைத்து ரகத் தேயிலைத் தூள்களும் கிலோ ரூ. 3 வரை விலை உயர்ந்துள்ளன.

குன்னூர் அரசு கூட்டுறவுத் தேயிலை ஏல மையத்தில் இந்த ஆண்டுக்கான ஏலம் வியாழக்கிழமை நடைபெற்றது. ஏல விவரங்கள் குறித்து சனிக்கிழமை வெளியிடப்பட்ட அறிக்கை: இந்த ஏலத்துக்கு 3 லட்சத்து 35 ஆயிரத்து 316 கிலோ தேயிலைத் தூள் விற்பனைக்கு வந்தது. இதில், இலை ரகம் ஒரு லட்சத்து 81 ஆயிரத்து 124 கிலோவும், டஸ்ட் ரகம் ஒரு லட்சத்து 54 ஆயிரத்து 192 கிலோவும் அடங்கும். இந்த ஏலத்தில் உள்நாடு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்களின் பங்களிப்பு அதிகரித்து இருந்ததாலும், பெரும்பாலான வெளிநாட்டு வர்த்தகர்கள் அதிக அளவில் ஏலத்தில் பங்கேற்றதாலும் அனைத்து ரகமும் கிலோ ரூ. 3 வரை விலை உயர்ந்தது. இதனால், நீண்ட இடைவெளிக்குப் பின்னர் 100 சதவீதம் தேயிலைத் தூள் விற்பனையானது. இந்த வார விலை நிலவரப்படி இலை ரகத்தில் சாதாரண ரகம் கிலோ ரூ. 50 முதல் ரூ. 55 வரையிலும், உயர் ரகம் ரூ. 70 முதல் ரூ. 75 வரையிலும், டஸ்ட் ரகத்தில் சாதாரண ரகம் ரூ. 60 முதல் ரூ. 65 வரையிலும், உயர் ரகம் ரூ. 70 முதல் ரூ. 75 வரையிலும் விலை கிடைத்தது.

கடந்த சில வாரங்களாக தேயிலைத் தூள் விற்பனை குறைந்து வந்த நிலையில் தற்போது அதன் விலையும், விற்பனை அளவும் அதிகரிக்கத் துவங்கி இருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**திருமானூரில் கால்நடை சிறப்பு மருத்துவ முகாம்**

அரியலூர் மாவட்டம், திருமானூரில் கால்நடை சிறப்பு மருத்துவ முகாம் சனிக்கிழமை நடைபெற்றன. ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் பரிந்துரையின் பேரில் நடைபெற்ற இம்முகாமில், 2,068 கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டன. கால்நடைகளுக்கு தொண்டை அடைப்பான்,துள்ளுமாரி நோய்,தடுப்பூசிகள்,பசு, ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் மற்றம் பொது சிகிச்சை

அளிக்கப்பட்டன. மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர் பாஸ்கரன் தலைமையில் இம்முகாம் நடைபெற்றது. ஊராட்சி மன்றத் தலைவர் கஸ்தூரி கருணாகரன் முன்னிலை வகித்தார். கால்நடை உதவி மருத்துவர்கள் மணிகண்டன், முருகேசன், செந்தாமரை, கால்நடை ஆய்வாளர்கள் முருகானந்தம்,செல்வராணி ஆகியோர் கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தனர். மேலும், 20 கிலோ தாது உப்பு கலவை கொண்ட பொட்டலங்கள் கால்நடைகளுக்கு வழங்கப்பட்டன.

**அரியலூர் மாவட்டத்தில் மழைநீரில் மூழ்கிய பயிர்களை வேளாண் அதிகாரிகள் ஆய்வு**

அரியலூர் மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களை வேளாண் அதிகாரிகள் அண்மையில் ஆய்வு மேற்கொண்டனர். அரியலூர் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பெய்த தொடர் மழையினால் நீரில் மூழ்கி சேதமடைந்த பயிர்கள், பூச்சி தாக்குதலுக்குட்பட்ட பயிர்கள் குறித்து ஆட்சியரின் உத்தரவுப் படி, குழுக்கள் அமைத்து கண்காணிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், மாவட்ட வேளாண் இணை இயக்குநர் பன்னீர் செல்வம் திருமானூர் வட்டாரத்தில் ஏலாக்குறிச்சி, வெற்றியூர், விரகாலூர், கல்லூர், கீழக்கொளத்தூர், விழுப்பனங்குறிச்சி, பெரியமறை ஆகிய கிராமங்களில் முகாமிட்டு பயிரிடப்பட்டுள்ள நெல் சம்பா பயிர்களை பார்வையிட்டார். வடுகபாளையம் கிராமத்தில் திருமானூர் வட்டார வேளாண் வளர்ச்சி அலுவலருடன் அப்பகுதியில் நெல் வயலை பார்வையிட்ட இயக்குநர், தேங்கியுள்ள மழைநீரை வெளியேற்ற ஏதுவாக வரத்து வாய்க்கால்களை தூர் வாரிட உத்தரவிட்டார். ஆய்வின் போது, தரக்கட்டுபாடு வேளாண் அலுவலர் சுப்ரமணியன், உதவி வேளாண் அலுவலர் ரமேஷ் மற்றும் வட்டார உதவி தொழில்நுட்ப மேலாளர் அன்பழகன் ஆகியோர் உடனிருந்தனர்.

**பரமத்தி வேலூரில் தொடர் மழையால் வெற்றிலை விலை சரிவு**

தொடர் மழையால் பரமத்தி வேலூர் வெற்றிலை ஏலச் சந்தையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் விலை சரிவடைந்ததாக விவசாயிகள் தெரிவித்தனர். பரமத்தி வேலூர் சுற்றுப் பகுதிகளான பாண்டமங்கலம், பொத்தனூர், வேலூர், அனிச்சம்பாளையம், குப்புச்சிப்பாளையம், நன்செய்

இடையாறு, பாலப்பட்டி உள்ளிட்ட சுற்றுப் பகுதி கிராமங்களில் விவசாயிகள் அதிகளவு வெற்றிலையைச் சாகுபடி செய்து வருகின்றனர். இங்கு விளையும் வெற்றிலை, கர்நாடகம், கேரளம், குஜராத், மகாராஷ்டிரம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்கள், சேலம், கோவை, மதுரை, திருப்பூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும் லாரிகள் மூலம் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் வெள்ளைக்கொடி வெற்றிலை (இளம் பயிர் மார்) 104 கவுளி கொண்ட கட்டு ஒன்று ரூ.4 ஆயிரத்துக்கும், கற்பூரி வெற்றிலை (இளம் பயிர் மார்) கட்டு ஒன்று ரூ.2 ஆயிரத்துக்கும், வெள்ளைக்கொடி வெற்றிலை (முதியம் பயிர் மார்) கட்டு ஒன்று ரூ.2 ஆயிரத்துக்கும், கற்பூரி வெற்றிலை (முதியம் மார்) கட்டு ஒன்று ரூ.1,200-க்கும் ஏலம் போயின.

வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் வெள்ளைக்கொடி வெற்றிலை (இளம் பயிர் மார்) 104 கவுளி கொண்ட கட்டு ஒன்று ரூ.3 ஆயிரத்துக்கும், கற்பூரி வெற்றிலை (இளம் பயிர் மார்) கட்டு ஒன்று ரூ.1,500-க்கும், வெள்ளைக்கொடி வெற்றிலை (முதியம் பயிர் மார்) கட்டு ஒன்று ரூ.1,300-க்கும், கற்பூரி வெற்றிலை (முதியம் பயிர் மார்) கட்டு ஒன்று ரூ.600-க்கும் ஏலம் போனது. தற்போது, பெய்துவரும் தொடர் மழையால் வெற்றிலை உற்பத்தி குறைந்ததுடன், விலையும் சரிவடைந்ததாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**புதுகையிலிருந்து 5 டன் பசுந்தீவனம் அனுப்பிவைப்பு**

கடலூர் மாவட்டத்தில் கன மழையால் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்காக புதுக்கோட்டையிலிருந்து 5 டன் பசுந்தீவனம் மாவட்ட நிர்வாகத்தால் சனிக்கிழமை அனுப்பி வைக்கப்பட்டது. வரலாறு காணாத மழையால் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர் உள்ளிட்ட மாவட்ட மக்கள் பாதிக்கப்பட்டனர். இவர்களுக்கு தேவையான நிவாரண உதவிகள் வழங்கும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடலூர் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அதேபோல பாதிக்கப்பட்டுள்ள கால்நடைகளுக்கும் பல்வேறு பகுதிகளில் இருந்து தீவனங்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன. புதுக்கோட்டை மாவட்ட

கால்நடை பராமரிப்புத் துறை மூலம் 5 டன் பசுந்தீவனம் லாரி மூலம் சனிக்கிழமை அனுப்பி வைக்கப்பட்டது.

**வேளாண்மைத்துறையில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது கலெக்டர் தகவல்**



கிருஷ்ணகிரி,

வேளாண்மைத்துறையில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது என்று கலெக்டர் ராஜேஷ் கூறினார். உலக மண்வள நாள் விழா

பையூர் மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் வேளாண்மை துறை சார்பில் உலக மண்வள நாள் விழா கலெக்டர் ராஜேஷ் தலைமையில் நடந்தது. கிருஷ்ணகிரி வேளாண்மை இணை இயக்குனர் சபா நடேசன் வரவேற்றார். தோட்டக்கலை இணை இயக்குனர் ராஜேந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் கிருஷ்டி, பையூர் மண்டல ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் தமிழ்ச்செல்வன் ஆகியோர் பேசினார்கள்.நிகழ்ச்சியில் விவசாயிகளுக்கு மண்வள அட்டைகளை வழங்கி கலெக்டர் ராஜேஷ் பேசியதாவது:– முன்னோடி மாநிலம்

வேளாண்மை துறையில் தமிழ்நாடு சிறந்த மாநிலமாக இருக்க தமிழக முதல்–அமைச்சர் பல்வேறு நல திட்ட உதவிகளை வழங்கி வருகிறார். மேலும் ஒருங்கிணைந்த விவசாயிகளுக்கு கையேடு வழங்கப்படுகிறது. இதுவரை நமது மாவட்டத்தில் 2 லட்சத்து 25 ஆயிரம் வேளாண்மை குறித்த விளக்க கையேடுகள் வழங்கப்பட்டுள்ளது. வேளாண்மைத்துறையில் மற்ற மாநிலங்களை விட தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. மேலும் 2–வது பசுமை புரட்சியை ஏற்படுத்த பல்வேறு திட்டங்களை முதல்–அமைச்சர் செயல்படுத்தி வருகிறார். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நெல், சிறுதானியம், எண்ணெய்வித்துப் பயிர்கள், பருத்தி, கரும்பு, காய்கறிகள் மற்றும் மலர்கள் 2 லட்சத்து 55 ஆயிரத்து 13 ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. விவசாயிகள் இருமடங்கு உற்பத்தி மும்மடங்கு வருமானம் என்ற இலக்கை அடைந்து வாழ்வின் தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு கலெக்டர் ராஜேஷ் கூறினார். நிகழ்ச்சியில் உதவி கலெக்டர் முகமதுஅஸ்லம், காவேரிப்பட்டணம் ஒன்றியக்குழுத் தலைவர் ஜமுனாகிருஷ்ணன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் குப்புசாமி, ராமச்சந்திரன், கோவிந்தராஜன், தமிழக விவசாயிகள் சங்க மாநில பொதுச் செயலாளர் ராமகவுண்டர், தமிழக விவசாயிகள் சங்க மாநில செயலாளர் லோகாபிராமன், வேளாண்மை விற்பனை வணிகத்துறை துணை இயக்குனர் காளியப்பன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**எஸ்.வாழவந்தி அருகே கனமழை: தண்ணீரில் மூழ்கி பயிர்கள் அழுகின இழப்பீடு வழங்க விவசாயிகள் கோரிக்கை**



மோகனூர்,

எஸ்.வாழவந்தி அருகே பெய்த கனமழையால், தண்ணீரில் மூழ்கி அழுகிய பயிர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

விவசாயம்

மோகனூர் எஸ்.வாழவந்தி அருகே உள்ள மேலப்பட்டி மற்றும் பென்னேரிப்பட்டி ஆகிய பகுதிகளில் உள்ள விவசாயிகள், தங்கள் விளை நிலங்களில் கரும்பு, சோளம், தென்னை, யூகலிப்டாஸ், வெண்டை, கத்தரி போன்றவற்றை பயிரிட்டு விவசாயம் செய்து வருகிறார்கள்.

இந்தநிலையில இங்குள்ள மணியாரன்தோட்டம், கவுண்டன் தோட்டம், ஆண்டிகாடு போன்ற பகுதிகளில் பட்டா நிலத்தில் ஒரு குட்டை உள்ளது. மழைக்காலங்களில் இந்த குட்டையில் தண்ணீர் தேங்கி, அருகில் உள்ள வடிகால் வழியாக வெளியேறி வெள்ளதாரையில் கலந்து கடைசியாக எஸ்.வாழவந்தி ஏரியில் கலக்கும். ஆனால் தற்போது வடிகால் நிலங்களை அந்த பகுதியில் உள்ளவர்கள் ஆக்கிரமித்து விவசாய நிலங்களாக மாற்றி விட்டனர். இதனால் தண்ணீர் வெளியே செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பயிர்கள் அழுகின

இதன் காரணமாக இந்த பகுதியில் தற்போது பெய்த கனமழையின் காரணமாக பாக்கியம் என்பவரது தோட்டத்தில் குத்தகைக்கு விவசாயம் செய்து வரும் ஒண்டிமுத்து என்பவர் பயிர் செய்திருந்த வெண்டைச்செடி, கத்தரி, பீர்க்கன், புடலை, சுரக்காய் போன்றவை முற்றிலுமாக தண்ணீரில் மூழ்கி அழுகி போயின. வேலுசாமி என்பவரது தோட்டத்தில் கரும்பு தண்ணீரில் வெட்ட முடியாமல் கிடக்கின்றது. காளியண்ணன் மற்றும் பொன்னுசாமி என்பவரின் தோட்டத்தில் யூகலிப்டாஸ், சக்திவேல் தோட்டத்தில் மாக்கன்றுகளும், பாலசுப்பிரமணிய தோட்டத்தில் மரவள்ளி கிழங்கு செடிகளும் அழகி போய்விட்டன. மேலும் சுற்றியுள்ள விவசாய நிலங்களில் தண்ணீர் தேங்கி உள்ளது. இதனால் மின்இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளது.

இழப்பீடுவழங்க கோரிக்கை

இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், எங்கள் பகுதியில் உள்ள ஏரிக்கு வரும் வடிகால் நிலங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. இதனால் ஏரிக்கு தண்ணீர்

வராமல், ஆங்காங்கே தண்ணீர் தேங்கியும், விவசாய நிலங்களிலும் புகுந்து விடுகின்றன. இவ்வாறு தண்ணீர் தேங்கி நிற்பதால் பயிர்கள் நீரில் மூழ்கி பயிர்கள் அழுகி விட்டன. இதன் காரணமாக எங்களுக்கு பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே அழகிய பயிர்களுக்கு உரிய இழப்பீடு வழங்கவும், ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

**பெரம்பலூர் மாவட்டம் விசுவகுடி அணையில் பாசன வாய்க்கால் அமைக்கும் பணி தீவிரம்**



வேப்பந்தட்டை,

பெரம்பலூர் மாவட்டம் விசுவகுடி அணையில் பாசன வாய்க்கால் அமைக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. விசுவக்குடி அணை பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டையை அடுத்துள்ள அன்னமங்கலம் ஊராட்சியில் உள்ள விசுவகுடியில் கல்லாற்றின் குறுக்கே பச்சமலையையும், செம்மலையையும் இணைத்து ரூ.33 கோடி மதிப்பீட்டில் புதிய அணைக்கட்டப்பட்டது. இந்த அணையின் கட்டுமான பணியின் பெரும்பகுதி முடிந்து விட்ட நிலையில் தற்போது பெய்து வரும் பருவ மழை நீரை பொதுப்பணித்துறை அதிகாரிகள் முதன்முதலாக அணையில் தேக்கி வைக்க உத்தரவிட்டனர். அதன்படி 33 அடி உயரம் கொள்ளளவு கொண்ட அணையில் கடந்த சில நாட்களாக பெய்த மழையில் 25 அடி உயரத்திற்கு நீர் தேங்கியுள்ளது. பாசன வாய்க்கால் அமைக்கும் பணி

புதிய அணைக்கட்டு என்பதால் அணையின் பாதுகாப்பு கருதி படிப்படியாக நீரை தேக்கி வைக்க அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர். மேலும் அணைக்கு

வரக்கூடிய முழு தண்ணீரையும் தேக்கி வைக்காமல் பெரும் பகுதி நீரை கல்லாற்றின் வழியே வெளியேற்றி வருகின்றனர். கல்லாற்றிலிருந்து செல்லும் தண்ணீர் வெங்கலம் ஏரிக்கு செல்கிறது. இந்நிலையில் இந்த ஆண்டு அணையில் தேக்கி வைத்துள்ள நீரை வரும் காலங்களில் பாசனத்திற்கு பயன்படுத்தும் வகையில் அணையின் மதகு பகுதியிலிருந்து சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் பாசன வாய்க்கால் அமைக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதனால் அந்த பகுதி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**தஞ்சை மாவட்டத்தில் தொடரும் கனமழை 400 எக்டேர் நெற்பயிர்கள் பாதிப்பு**



தஞ்சாவூர்,

தஞ்சை மாவட்டத்தில் தொடர்ந்து கனமழைபெய்து வருதால் நெற்பயிர்கள் நீரில் மூழ்குவது அதிகரித்து வருகிறது. இதுவரை 400 எக்டேர் நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. வடகிழக்கு பருவமழை தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது. இந்த நிலையில் வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தஞ்சை மாவட்டத்தில் கடந்த 6 நாட்களாக மழை தொடர்ந்து பெய்து வருகிறது.

இந்த நிலையில் தஞ்சையில் நேற்று முன்தினம் இரவு மழைதூறல் காணப்பட்டது. நள்ளிரவுக்கு பின்னர் மழை இன்றி காணப்பட்டது. இந்தநிலையில் நேற்று காலை 8 மணிஅளவில் மழை பெய்யத்தொடங்கியது. இந்த நிலையில் 11.30 மணி அளவில் பலத்த மழை பெய்தது. சுமார் அரைமணி

நேரத்துக்கும் மேலாக இடைவிடாது மழை கொட்டியது. அதன் பின்னரும் தொடர்ந்து மழை பெய்து கொண்டே இருந்தது. 400 எக்டேர் பாதிப்பு தஞ்சை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பரவலாக மழை பெய்தது. திருவையாறு, திருக்காட்டுப்பள்ளி, வல்லம், அய்யம்பேட்டை, மஞ்சளாறு, திருவிடைமருதூர், அணைக்கரை, பட்டுக்கோட்டை, அதிராம்பட்டினம், பேராவூரணி, மதுக்கூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பலத்தமழை பெய்தது. தஞ்சை மாவட்டத்தில் தற்போது சம்பா, தாளடி நெற்பயிர்கள் சாகுபடிசெய்யப்பட்டுள்ளன. இதில் தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கி உள்ளன. தஞ்சை மாவட்டத்தில் நேற்று முன்தினம் வரை சுமார் 350 எக்டேர் நெற்பயிர்கள் நீரில் மூழ்கி காணப்பட்டன. ஆனால் தொடர்ந்து மழை பெய்து வருவதால் நெற்பயிர்கள் நீரில் மூழ்குவது அதிகரித்து வருகிறது. நேற்று இது 400 எக்டேராக அதிகரித்தது. நெற்பயிர்கள் அழுகின மேலும் 64 எக்டேர் நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கி அழுகி சேதம் அடைந்துள்ளன. தண்ணீர் தேங்கிய வயல்களில் நீர் வடிவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. மேலும் அவ்வப்போது மழை பெய்து வருவதால் தண்ணீர் தேங்கிய வயல்களில் நெற்பயிர்கள் அழுகி காணப்படுகின்றன. இதனால் எவ்வளவு எக்டேரில் பயிர்கள் சேதம் அடைந்துள்ளன என்பதை கணக்கிட முடியவில்லை. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். மழைநீர் வடிந்தால் தான் எவ்வளவு எக்டேர் பாதிக்கப்பட்டுள்ளன என்பது தெரிய வரும். தொடர்ந்து வேளாண்மைத்துறை அதிகாரிகள் மழைநீர் மூழ்கிய நெற்பயிர்களை ஆய்வு செய்து வருகிறார்கள். மழைஅளவு தஞ்சை மாவட்டத்தில் பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு:- அதிராம்பட்டினம் 35.5, கும்பகோணம் 15, பாபநாசம் 14.2, தஞ்சாவூர் 6, திருவையாறு 15, திருக்காட்டுப்பள்ளி 17, வல்லம் 10, கல்லணை 7.6, அய்யம்பேட்டை 36, திருவிடைமருதூர் 19.2, மஞ்சளாறு 26.4, பூதலூர் 7.2, வெட்டிக்காடு 10, ஈச்சன்விடுதி 21, ஒரத்தநாடு 7.7, மதுக்கூர் 16, பட்டுக்கோட்டை 20, பேராவூரணி 27, அணைக்கரை 34, குருங்குளம் 4, நெய்வாசல்தென்பாதி 10.4.

**தஞ்சை மாவட்டத்தில் வயல்களில் தேங்கிய மழை நீர் ஒருவாரமாக வடியாததால் நெற்பயிர்கள் அழுகின**



தஞ்சாவூர்,

தஞ்சை மாவட்டத்தில் பெய்த தொடர்மழையினால் வயல்களில் தேங்கிய மழை நீர் ஒரு வாரமாக வடியாததால் நெற்பயிர்கள் அழுகின. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். வடகிழக்கு பருவமழை

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது. இந்த நிலையில் வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தஞ்சை மாவட்டத்தில் கடந்த 5 நாட்களாக மழை தொடர்ந்து பெய்து வருகிறது. இந்த நிலையில் தஞ்சையில் நேற்று முன்தினம் இரவு மழை தூறிக்கொண்டே இருந்தது. அதிகாலையில் இருந்து விட்டுவிட்டு மழை பெய்தது. மதியத்துக்குப்பிறகு பல்வேறு இடங்களில் பலத்த மழையும் பெய்தது.

வீடுகள் சேதம் தஞ்சை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பரவலாக மழை பெய்தது. ஒரத்தநாடு, நெய்வாசல் தென்பாதி, திருவையாறு, வெட்டிக்காடு, கும்பகோணம், பாபநாசம், அய்யம்பேட்டை, திருவிடைமருதூர், மஞ்சளாறு, அணைக்கரை, மதுக்கூர், பட்டுக்கோட்டை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பலத்தமழை பெய்தது. தஞ்சை மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையினால் இதுவரை 76 பசுமாடுகள் பலியாகி உள்ளன. 2 காளை மாடுகள், 2 எருமை மாடுகள், 39 கன்று குட்டிகள், 145 வெள்ளாடுகள், 3 செம்மறிஆடுகள் பலியாகி உள்ளன. மேலும் 57 வீடுகள் இடிந்து விழுந்து முழுவதும் சேதமடைந்துள்ளன. மேலும் 831 வீடுகள் பகுதி அளவில் சேதம் அடைந்துள்ளன.

நெற்பயிர்கள் அழுகத்தொடங்கின தஞ்சை மாவட்டத்தில் தற்போது சம்பா, தாளடி நெற்பயிர்கள் சாகுபடிசெய்யப்பட்டுள்ளன. இதில் தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கி உள்ளன. தஞ்சை மாவட்டத்தில் நேற்று வரை சுமார் 350 எக்டேர் நெற்பயிர்கள் நீரில் மூழ்கி காணப்படுகின்றன.

மேலும் 64 எக்டேர் நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கி அழுகி சேதம் அடைந்துள்ளன. தண்ணீர் தேங்கிய வயல்களில் நீர் வடிவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. மேலும் அவ்வப்போது மழை பெய்து வருவதால் தண்ணீர் தேங்கிய வயல்களில் நெற்பயிர்கள் அழுகத்தொடங்கி உள்ளன. இதனால் பயிர்கள் சேதம் இன்னும் அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். மழைஅளவு

தஞ்சை மாவட்டத்தில் பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு:–

அதிராம்பட்டினம் 23, கும்பகோணம் 35, பாபநாசம் 25.5, தஞ்சாவூர் 23, திருவையாறு 44, திருக்காட்டுப்பள்ளி 9, வல்லம் 4, கல்லணை 7.6, அய்யம்பேட்டை 41, திருவிடைமருதூர் 32.4, மஞ்சளாறு 44.4, பூதலூர் 7.2, வெட்டிக்காடு 22, ஈச்சன்விடுதி 15.2, ஒரத்தநாடு 20.2, மதுக்கூர் 25.2, பட்டுக்கோட்டை 27, பேராவூரணி 14, அணைக்கரை 71.6, குருங்குளம் 19, நெய்வாசல்தென்பாதி 44.4

**கோவை வர்த்தக மையத்தில் ரூ.3 கோடிக்கு தேயிலைத்தூள் ஏலம்**



கோவை,

கோவை வர்த்தக மையத்தில் ரூ.3 கோடிக்கு தேயிலைத்தூள் ஏலம் போனது.

கோவை வர்த்தக மையம்

கோவையில் உள்ள தேயிலை வர்த்தக மையத்தில் வாரந்தோறும் இணையதளம் மூலம் தேயிலைத்தூள் ஏலம் நடைபெற்று வருகிறது. இதில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் உள்ள ஏலதாரர்கள் தேயிலைத் தூள் ரகங்களை ஏலத்தில் எடுத்து வருகிறார்கள். இதன்படி நடைபெற்ற 49-வது ஏலத்தின் விவரம் வருமாறு:- தேயிலைத்தூள் ஏலம். இதில் 2 லட்சத்து 90 ஆயிரத்து 149 கிலோ தேயிலைத்தூள் ஏலத்துக்கு வந்தது. அதில் 2 லட்சத்து 46 ஆயிரத்து 519 கிலோ தேயிலைத்தூள் ஏலம் போனது. இது 85 சதவீதம். இதன் ஏல மதிப்பு ரூ.2 கோடியே 9 லட்சத்து 96 ஆயிரத்து 23 ஆகும். 43 ஆயிரத்து 630 கிலோ தேயிலைத்தூள் தேக்கம் அடைந்து உள்ளது. ஒரு கிலோ தேயிலைத்தூளின் சராசரி ஏல மதிப்பு 85 ரூபாய் 17 காசு. இது கடந்த வாரம் 84 ரூபாய் 29 காசாக இருந்தது. இலைரக தேயிலை zஇலைரக தேயிலையை பொறுத்தவரை 1 லட்சத்து 58 ஆயிரத்து 102 கிலோ ஏலத்திற்கு வந்தது. இதில் 1 லட்சத்து 24 ஆயிரத்து 248 கிலோ ஏலம் போனது.

இது 90 சதவீதம். இதன் மொத்த விற் பனை மதிப்பு ரூ.90 லட்சத்து 89 ஆயிரத்து 983 ஆகும். 33 ஆயிரத்து 854 கிலோ இலைரக தேயிலைத் தூள் தேக்கம் அடைந்து உள்ளது. ஒரு கிலோ இலைரக தேயிலையின் சராசரி ஏல மதிப்பு 73 ரூபாய் 16 காசு ஆகும். இது கடந்த வாரம் 73 ரூபாய் 9 காசாக இருந்தது. மொத்த விற்பனை

இந்த ஏலத்தில் 3 லட்சத்து 70 ஆயிரத்து 767 கிலோ தேயிலைத்தூள் மற்றும் இலைரக தேயிலை விற் பனையாகி உள்ளது. 77 ஆயிரத்து 484 கிலோ தேக்கம் அடைந்துள்ளது. இந்த ஏலத்தின் மொத்த மதிப்பு ரூ.3 கோடியே 86 ஆயிரத்து 6 ஆகும்.

இந்த தகவலை கோவை தேயிலை விற்பனை மைய (போர்ப்ஸ்) மேலாளர் எம்.பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

**விளை பொருட்கள் உற்பத்தியை பெருக்க மண் வளத்தை பாதுகாக்க வேண்டும் கலெக்டர் வெங்கடாசலம் பேச்சு**



தேனி,

விளை பொருட்களின் உற்பத்தியை பெருக்க மண் வளத்தை பாதுகாக்க வேண்டும் என்று தேனியில் நடந்த உலக மண்வள தின விழாவில் கலெக்டர் வெங்கடாசலம் பேசினார். மண்வள தின விழா

தேனி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், உலக மண்வள தின விழா நடந்தது. விழாவுக்கு மாவட்ட கலெக்டர் வெங்கடாசலம் தலைமை தாங்கி பேசினார்.

அவர் பேசும் போது கூறியதாவது:– உலக அளவில் மண்வளத்தை பாதுகாக்கும் பொருட்டு, டிசம்பர் 5–ந்தேதி உலக மண்வள நாளாக கொண்டாடப்பட்டு வருகிறது. மக்கள் தொகை பெருக்கத்திற்கேற்ப விளை பொருட்கள் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்றால் மண்வளத்தை பாதுகாப்பது அவசியமாகிறது. நமது முன்னோர்கள் பாதுகாத்த மண்வளம் மற்றும் பயிர்களை அடுத்த தலைமுறைக்கும் கொண்டு செல்ல வேண்டுமென்றால் மண்வள பாதுகாப்பு முக்கியமாகும். இந்தியாவில் உள்ள 32 கோடியே 80 லட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பில் 17.5 கோடி ஹெக்டேர் நிலங்கள் மண்அரிப்பு உள்ளிட்ட காரணங்களினால் வளம் குன்றி விட்டதாக பல்வேறு ஆய்வறிக்கைகள் தெரிவிக்கின்றன. 1 செ.மீ மண் உருவாக ஆயிரம் ஆண்டுகள் தேவைப்படும் நிலையில் வரும் 2050–ம் ஆண்டிற்கு 69 சதவீதம் கூடுதலாக உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். மண்ணை வளமாக்க...

நிலத்தின் பரப்பினை அதிகரிக்க இயலாத சூழ்நிலையில் மண்ணை வளமாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். எனவே உற்பத்தியை பெருக்க வேண்டும் என்பதற்காக அதிக ரசாயன உரங்களை பயன்படுத்துவதை விவசாயிகள் தடுத்திட வேண்டும். மண்ணை வளமாக்கிட பாதுகாப்பான உழவுமுறை, பரந்தபடுக்கை பாத்திமுறை, உயிரியியல் சார்ந்த வேளாண்மைமுறை, இயற்கை உரம், பஞ்சகவ்விய பசும்பால் உரம், மண்புழு உரம், வேர்பூஞ்சான் உயிர்உரங்கள் போன்ற மண்ணில் வாழும் நுண்ணுயிரிகளுக்கு உகந்தவற்றை பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறு கலெக்டர் வெங்கடாசலம் பேசினார்.

இந்த விழாவில், மண் பரிசோதனை மேற்கொண்ட 20 விவசாயிகளுக்கு மண்வள அடையாள அட்டையை கலெக்டர் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், மதுரை வேளாண்மை கல்லூரி மாணவ—மாணவிகளின் வில்லுப்பாட்டு கிராமிய கலைநிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதில் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் வெங்கடசுப்பிரமணியன், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ரெங்கநாதன், வேளாண்மை உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு) ஜெயபாண்டியன் மற்றும் வேளாண்மைத்துறை அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

தினகரன்

**11,000 கனஅடி நீர் திறப்பு தாமிரபரணியில் வெள்ளப்பெருக்கு**



நெல்லை: பாபநாசம் அணை நிரம்பி வழியும் நிலையில் பாபநாசம் மற்றும் சேர்வலாறு அணைகளிலிருந்து 11 ஆயிரம் கனஅடி நீர் நேற்று மாலை திறக்கப்பட்டது. இதனால் தாமிரபரணியில் நள்ளிரவு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. நெல்லை மாவட்டத்தில் பலத்த மழையால் மணிமுத்தாறு தவிர பிற அணைகள் நிரம்பி விட்டன. கடந்த 4 தினங்களாக பாபநாசம் மற்றும் சேர்வலாறு அணைகளில் இருந்த உபரிநீர் திறக்கப்படுகிறது. கடந்த 3 தினங்களாக சுமார் 10 ஆயிரம் கனஅடி நீர் வைகுண்டம் அணையை தாண்டி கடலுக்கு வீணாக சென்றுகொண்டிருக்கிறது. இந்நிலையில் நேற்று காலை 8 மணி நிலவரப்படி 143 அடி கொள்ளளவு உடைய பாபநாசம் அணை நீர்மட்டம் 141.95 அடியாக இருந்தது. அணைக்கு 4 ஆயிரத்து 228.72 கனஅடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து 3 ஆயிரத்து 599.33 கன அடி நீர் வெளியேற்றப்பட்டது. சேர்வலாறு நீர்மட்டம் 148.36 அடியாக இருந்தது. நேற்று காலை 8 மணி வரை பாபநாசத்தில் 62 மில்லி மீட்டரும் சேர்வலாறில் 40 மில்லி மீட்டரும் மழை பதிவாகியிருந்தது. இந்த நிலையில் நேற்று பகலில் மழை காரணமாக இந்த அணைகளுக்கு நீர்வரத்து மேலும் அதிகரித்தது. இதையடுத்து கலெக்டர் கருணாகரன் உத்தரவின்படி சேர்வலாறு அணையிலிருந்து 4 ஆயிரம் கனஅடி நீரும், பாபநாசம் அணையிலிருந்து 7 ஆயிரம் கன அடி நீரும் நேற்று மாலை திறந்து விடப்பட்டுள்ளது. இதனால் தாமிரபரணி ஆற்றில் பொது மக்கள் யாரும் குளிக்க வேண்டாம். கரையோரத்தில் வசிக்கின்ற மக்கள் பாதுகாப்பான இடத்திற்கு செல்ல வேண்டும் என கலெக்டர் தெரிவித்துள்ளார்.

தாமிரபரணியில் ஏற்கனவே நேற்று பகலில் 5 ஆயிரம் கன அடி அளவிற்கு தண்ணீர் சென்றுகொண்டிருந்தது. மேலும் 11 ஆயிரம் கனஅடி நீர் திறக்கப்பட்டதால் தாமிரபரணியில் நேற்று நள்ளிரவில் வெள்ளம் பெருக்கெடுத்தது. இதனால் கரையோர மக்கள் பாதுகாப்பான இடத்திற்கு இடம் பெயர்ந்தனர்.

## 100 ஏக்கர் விளைநிலத்தில் மழை வெள்ளம் புகுந்தது

விழுப்புரம், : விழுப்புரம் அருகே உள்ள வாதானூரான் வாய்க்காலில் வெள்ள நீர் கரை புரண்டு ஓடுவதால் அருகில் இருந்த தார்சாலை பெயர்ந்து விளை

நிலங்களுக்குள் தண்ணீர் புகுந்ததால் பயிர்கள் நாசமடைந்தன. விவசாயிகள் பெரும் வேதனையடைந்துள்ளனர்.விழுப்புரம் அடுத்த வி.மாத்தூர் அணைக்கட்டில் இருந்து பிரிந்து செல்வது வாதானூரான் வாய்க்கால். இந்த வாய்க்காலில் செல்லும் தண்ணீரில் அப்பகுதியில் உள்ள ஆயிரக்கணக்கான விவசாய நிலங்களுக்கு பயன்படுகிறது. இந்நிலையில் அப்பகுதியில் கடந்த நான்கு ஆண்டுகளாக சரியாக மழை பெய்யாததால் வாதானூரான் வாய்க்காலில் செடி, கொடிகள், முளைத்து தூர்ந்து போனது. அந்த வாய்க்காலை தூர்வார வேண்டும் என கிராம மக்கள் பல முறை ஊராட்சி நிர்வாகத்திடம் முறையிட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதனால் தற்போது பெய்து வரும் தொடர் மழையில் பம்பை ஆற்றில் தண்ணீர் கரைபுரண்டு ஓடுகிறது. அதனால் வாதானூரான் வாய்க்காலில் தண்ணீர் அளவுக்கு அதிகமாக சென்றதால் வாய்க்காலின் கரைகளில் அரிப்பு ஏற்பட்டு அருகே இருந்த தார் சாலை பெயர்ந்து விளை நிலங்களுக்குள் தண்ணீர் புகுந்தது. இதனால் அப்பகுதில் சுமார் 100 ஏக்கருக்கும் மேற்பட்ட கரும்பு, நெல் உள்ளிட்ட பயிர்கள் தண்ணீரில் தத்தளித்து வருகிறது. அப்பகுதியில் நெல், கரும்பு உள்ளிட்ட பயிர்கள் தண்ணீரில் நீண்ட நாட்களாக மூழ்கி உள்ளதால் பயிர்கள் அழுகி வீணாகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே விளைநிலங்களில் தேங்கி உள்ள தண்ணீர் வடிய அரசு உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

**உளுந்து சாகுபடியில் தொழில்நுட்பங்கள்**

பழநி, : உளுந்து சாகுபடியில் உள்ள தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு வேளாண் துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர்.பழநி வட்டார விவசாயிகள் நல்ல வடிகால் வசதி உள்ள அனைத்து நிலங்களிலும் உளுந்து சாகுபடி செய்யலாம். செப்டம்பர்,அக்டோபர் காலங்களில் வம்பன் 2,3,4 மற்றும் ஏ.பி.கே.1 ஆகிய ரகங்களை பயிரிடலாம். ஜனவரி,பிப்ரவரி மாதங்களில் டி.எம்.வி.1 ரகத்தை பயிரிடலாம். பிப்ரவரி,மார்ச் மாதங்களில் வம்பன் 4 மற்றும் டி.எம்.வி.1 ரகத்தை பயிரிடலாம். எக்டேருக்கு 20 கிலோ விதையை 30*10 சென்டி மீட்டர் இடைவெளியில் விதைக்க வேண்டும். விதைகளை துத்தநாக சல்பேட் 100 பிபி.எம் கரைசலில் 1 கிலோ விதைக்கு 1

லிட்டர் கரைசல் என்ற அளவில் 3 மணி நேரம் ஊர வைத்து விதைக்க வேண்டும்.

ஊறிய விதைகளை நிழலில் ஆரம்ப ஈர நிலை வரும் உலர வைத்து 1 மாதம் வரை உபயோகிக்கலாம். 1 எக்டேருக்கு தேவையான விதையுடன் 2 பாக்கெட் ரைசோபியம் (பயிறு) உயிர் உரத்தை ஆறிய அரிசி கஞ்சியுடன் கலந்து 15 நிமிடம் நிழலில் உலர்த்தி 24 மணி நேரத்திற்குள் விதைக்க வேண்டும். 1 கிலோ விதைக்கு டிரைகோ டெர்மாவிரிடி 4 கிராம் என்ற அளவில் கலந்து விதைக்க வேண்டும். 2 அல்லது 3 முறை நிலத்தை நன்கு உழுது பண்படுத்த வேண்டும். எக்டருக்கு 12.5 மெட்ரிக் டன் தொழு உரம் அல்லது கம்போஸ்ட் கடைசி உழவுக்கு முன் இட்டு மண்ணுடன் கலக்க வேண்டும். மண் பரிசோதனை பரிந்துரைப்படி உரமிட வேண்டும். பொது பரிந்துரையின்படி இறவை சாகுபடியாளர்கள் எக்டேருக்கு 25 கிலோ தழைச்சத்து, 50 கிலோ மணிச்சத்துக்கள் இட வேண்டும். மானாவாரி விவசாயிகள் எக்டேருக்கு 12.5 கிலோ தழைச்சத்து, 25 கிலோ மணிச்சத்துக்கள் இட வேண்டும்.இரவையில் எக்டேருக்கு 500 மில்லி புளுகுளோரலின் களைக்கொல்லியை 625 லிட்டர் நீரில் கலந்து விதைத்த 3ம் நாள் தெளித்து உடன் நீர் பாய்ச்ச வேண்டும். பின், 25வது நாள் கைக்களை எடுக்க வேண்டும். மானாவாரி நிலங்களில் 20 மற்றும் 40வது நாளில் கைக்களை எடுக்க வேண்டும்.

உளுந்துக்கு மொத்தமாக 4 அல்லது 5 முறை நீர் பாய்ச்சினால் போதுமானது ஆகும். குறிப்பாக பூக்கும் மற்றும் காய் பிடிக்கும் பருவங்களில் வறட்சியை தவிர்க்க வேண்டும். ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையை கடைபிடிக்க வேண்டுமென பழநி வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

## இடைவிடாது பெய்த மழையால் விவசாய பயிர்கள் சேதம்

திண்டுக்கல், : திண்டுக்கல் பகுதியில் தொடர்ந்து பருவமழை பெய்து வருகிறது. இதனால் மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான அணைகள் அதன் கொள்ளளவை நெருங்கி வருகிறது. திண்டுக்கல் நகர் பகுதி குளங்களிலும் கணிசமாக மழைநீர் தேங்கி வருகிறது. மழை நீடிப்பதால் வெள்ளோடு, அய்யலூர், புகையிலைப்பட்டி, வடமதுரை உள்ளிட்ட பல பகுதிகளில் கொடி

வகை காய்களான அவரை, புடலை, பீர்க்கங்காய் விவசாயம் முற்றிலும் பாதிக்கப்பட்டு உள்ளது. நிலக்கோட்டை, சிறுநாயக்கன்பட்டி, பஞ்சம்பட்டி, வக்கம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் பூக்கள் செடியிலேயே அழுகிய விட்டதால் பூ விவசாயம் பெரிதும் பாதித்துள்ளது. நேற்று முன்தினம் இரவு முதல் மழை மீண்டும் பெய்ய தொடங்கியது. நேற்று இரவு வரை மழை நீடித்தது. சிறிதும் இடைவெளி இல்லாமல் மழை பெய்தது. இதனால் மக்கள் வெளியே செல்ல முடியாமல் வீட்டிற்குள்ளேயே முடக்கி போனார்கள். விடுமுறை தினங்களில் பரபரப்பாக இருக்கும் பஸ் ஸ்டாண்டு, மெயின் ரோடு, கடைவீதி உள்ளிட்ட பகுதிகள் ஆட்கள் நடமாட்டம் இல்லாமல் வெறிச்சோடி கிடந்தது. சாலையோர வியாபாரிகள், தினக்கூலி தொழிலாளர்கள் வேலைவாய்ப்பின்றி செட்டுகளில் முடங்கி கிடந்தனர்.

**திருந்திய நெல் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்**

தேவதானப்பட்டி, : தேவதானப்பட்டி பகுதியில் திருந்திய நெல் சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வமடைந்துள்ளனர். தேவதானப்பட்டி மஞ்சளாறு அணை பாசனம் மூலம் கெங்குவார்பட்டி, புல்லக்காபட்டி, அட்டணம்பட்டி, சாத்தாகோவில்பட்டி ஆகிய பகுதிகளில் தற்போது நெல் நடவு பணி நடைபெற்று வருகிறது. இதில் திருந்திய நெல் சாகுபடிக்கு விவசாயிகள் ஆர்வமுடன் நடவு செய்கின்றனர். இந்த திருந்திய நெல் சாகுபடி மூலம் நடவு செய்தால், நெல் பயிர்களுக்கு நல்ல காற்றோற்றம் கிடைக்கும். இதனால் நெல் பயிரை தாக்கக்கூடிய புகையான் நோய் கட்டுப்படும். குறைந்தளவு தண்ணீர் இருந்தால் போதும். 50 சதவிகிதம் அதிக மகசூல் உள்ளிட்ட நன்மைகள் இருப்பதால் தேவதானப்பட்டி பகுதியில் விவசாயிகள் ஆர்வத்துடன் திருந்திய நெல் சாகுபடி செய்கின்றனர். கெங்குவார்பட்டியைச் சேர்ந்த விவசாயி ஆண்டவர் என்பவரது நிலத்தில் திருந்திய நெல் சாகுபடி குறித்து உதவி வேளாண்மை அலுவலர் கண்ணன் விளக்கம்அளித்தார்.

**விருத்தாசலத்துக்கு 2,661 டன் உரம் வந்தது**

விருத்தாசலம், : விருத்தாசலம் ரயில் நிலையத்திற்கு, விசாகப்பட்டினம் மத்திய அரசு நிறுவனமாக ஐபிஎல் உரக்கிடங்கில் இருந்து சரக்கு ரயில் மூலம்

ஆயிரத்தி 330 டன் பொட்டாஷ், ஆயிரத்தி 331 டன் யூரியா என மொத்தம் 2 ஆயிரத்து 661 டன் உரங்கள் வந்தது. இந்த உர மூட்டைகளை விருத்தாசலத்தில் இருந்து லாரிகள் மூலம் ஏ.கடலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க உரக்கிடங்குகளுக்கு அனுப்பும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டனர்.

**மாவட்டத்தில் 75 சதவீத நீர்நிலைகள் நிரம்பவில்லை மாடக்குளம், செல்லூர் வண்டியூர், கண்மாய்கள் பரிதாபம்**

மதுரை, : மதுரை மாவட்டத்தில் மழை குறைவால் 75 சதவீதம் கண்மாய்கள் இன்னும் நிரம்பவில்லை. வண்டியூர், மாடக்குளம், செல்லூர் உள்ளிட்ட கண்மாய்கள் குறைந்த அளவு நீருடன் பரிதாபமாக காட்சி அளிக்கின்றன. சிறு மழைக்குக்கூட தாங்காத சாலைகள் படுமோசமாகி வருகின்றன. இதனால், விபத்துகளில் சிக்குவோர் எண்ணிககை அதிகரித்து வருகிறது.
தமிழகத்தில் வடக கிழக்குப் பருவமழை மற்றும் வங்கக் கடலில் ஏற்பட்ட குறைந்த காற்றழுத்தத் தாழ்வுநிலையால் சென்னை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்கள் வெள்ளக்காடாகி நிலைகுலைந்தன. ஆனால் மதுரை மாவட்டத்தில் சராசரி மழைக்கும் குறைவாகவே பெய்துள்ளது. கடந்த 2 நாளாக மழை விட்டுவிட்டுப் பெய்து வருகிறது.
மதுரை மாவட்டத்தில் 1,321 பொதுப்பணித்துறை கண்மாய்கள் உள்பட 2 ஆயிரத்து 407 கண்மாய் உள்ளன. இதில் 25 சதவீதம் அளவுக்கே நிரம்பி உள்ளன. 75 சதவீதம் நிரம்பவில்லை. அலங்காநல்லூர் அருகிலுள்ள சாத்தியாறு கண்மாயும் நிரம்பவில்லை.
மதுரை நகர் பகுதியிலுள்ள வண்டியூர், மாடக்குளம், செல்லூர் போன்ற கண்மாய்கள் குறைந்த அளவிலான தண்ணீருடன் பரிதாபமாக காட்சி அளிக்கிறது.
மதுரை மாவட்டத்தின் பல பகுதிகளில் நேற்று முன்தினம் மாலை கனமழை பெய்தது. பின்னர் இரவு முழுவதும் மழை தூரிக்கொண்டே இருந்தது. நேற்று காலையும் மழை தூரியது. பின்னர் வெயில் அடித்தது. பிற்பகல் 3 மணி அளவில் மதுரை நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் பரவலான மழை பெய்தது. இந்த மழை காரணமாக கோரிப்பாளையம், யானைக்கல், பெரியார் பஸ் நிலையப்பகுதி உள்ளிட்ட சில இடங்களில் சாலைகளில் மழை நீர் தேங்கியது.

இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. மேலும் இரவு வரை விட்டுவிட்டு மழை பெய்து கொண்டிருந்தது. மழை காரணமாக மதுரை நகர் பகுதியில் சாலைகள் பலத்த சேதமடைந்துள்ளன. தொடர்ந்து மழை பெய்து வருவதால் சேதமடைந்த சாலைகளைச் சரி செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால், மேலும் மேலும் சேதமடைந்து தற்போது படுமோசமாக உள்ளது. மதுரை நகர் முழுவதும் உள்ள சாலைகள் அனைத்துமே மோசமாக இருந்தாலும், குறிப்பாக காளவாசல் சிக்னல், ஈக்தா திடல், காளவாசலிருந்து பாத்திமா கல்லூரி செல்லும் சாலையில் பெத்தானியாபுரம் பகுதி, அருள்தாஸ்புரம், அரசரடி சிக்னல், பிபி சாவடி, யானைக்கல், சிம்மக்கல், முனிச்சாலை, புது ஜெயில் ரோடு, மெஜிரா கோட்ஸ் பாலம், அண்ணா பஸ் நிலையப்பகுதிகள் உள்பட பல்வேறு இடங்களில் உள்ள சாலைகளில் வாகனம் ஓட்டிச்செல்ல முடியாத அளவுக்கு சேதமடைந்துள்ளன.

இதனால் வாகன ஓட்டிகள் குறிப்பாக இருசக்கர வாகன ஓட்டிகள் மிகவு அவதிப்படுகின்றனர். பலர் சாலையில் ஏற்பட்டுள்ள குண்டு குழியில் சிக்கி கீழே விழுந்து காயமடைகின்றனர். இதனால், சாலை விபத்தில் காயமடைந்து அரசு மருத்துவமனைக்கு வருவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. எனவே, சேதமடைந்த சாலைளை விரைவாகச் சீர் செய்ய வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

விகடன்

**சென்னையில் கூடுதலாக 32 நகரும் பண்ணை பசுமை கடைகள்:அரசு அறிவிப்பு!**



சென்னை: கனமழை எதிரொலியாக சென்னையில் பொது மக்களுக்கு உதவிடும் வகையில் கூடுதலாக 32 இடங்களில் நகரும் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் அமைக்கப்பட்டுள்ளன என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், " நவம்பர் மாதம் பெய்த மழையின் காரணமாக காய்கறிகள் வரத்து குறைந்து, விலை உயர்ந்ததால், குறைந்த விலையில் தரமான காய்கறிகளைப் பொது மக்கள் பெற சென்னை நகரில் கூடுதலாக 50 காய்கறி விற்பனை மையங்களை, தற்காலிகமாக திறக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 17.11.2015 அன்று ஆணையிட்டார்கள். தற்போது கூடுதலாக துவக்கப்பட்ட 50 தற்காலிக பண்ணை பசுமை கடைகள் மூலம் 18 நாட்களில், 62.33 டன் தரமான காய்கறிகள் குறைந்த விலையில் 30.11.2015 வரை விற்பனை செய் யப்பட்டுள்ளன. இக்கடைகள் ஆரம்பித்த சில நாட்களில் வெளிச்சந்தையில் காய்கறிகள் விலை குறையத் தொடங்கியது. இந்த தற்காலிக பண்ணை பசுமை கடைகள் தொடர்ந்து இயங்கி வருகின்றன. இந்த வாரத்தில் பெய்த கடும் மழையால் சென்னைக்கு காய்கறிகள் வரத்து குறைந்தமையால், காய்கறிகளின் விற்பனையைச் சீர்படுத்தும் வகையிலும், நுகர்வோருக்கு உரிய நேரத்தில் தரமான காய்கறிகள், நியாயமான விலையில், அவர்களின் குடியிருப்புகளுக்கருகில் கிடைக்கும் வகையிலும், கூடுதலாக பதினொன்று நகரும் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் கீழ்க்கண்ட 32 இடங்களில் விற்பனை செய்ய உள்ளன. காரணீஸ்வரர் கோவில் தெரு, (சைதாப்பேட்டை), ஜி. என். செட்டி தெரு, (தியாகராய நகர்), காம்தார் நகர், (நுங்கம்பாக்கம்), ராகவேந்திரா கல்யாண மண்டபம், (கோடம்பாக்கம்), நுங்கம்பாக்கம் இரயில்வே ஸ்டேஷன், ரட்லேண்ட்கேட், எல்லையம்மன் கோவில் தெரு, (தேனாம்பேட்டை), மயிலாப்பூர் குளம், பெசன்ட்நகர், சிந்தாதிரிப்பேட்டை, நேஷனல் பப்ளிக் ஸ்கூல் (கோபாலபுரம்), இராயப்பேட்டை, சாந்தி காலனி, (அண்ணாநகர்), போக்குவரத்து அலுவலகம் அருகில் (அண்ணாநகர்), வசந்தம் காலனி (அண்ணாநகர்), எம்.எம்.டி.ஏ. காலனி அரும்பாக்கம், சேணியம்மன் கோயில் தெரு, (தண்டையார்பேட்டை), திருவொற்றியூர் பேருந்து நிலையம் பார்த்தசாரதி பாலம் (தங்கசாலை), மண்ணப்பன் தெரு, (பழைய வண்ணாரப்பேட்டை), சிங்கந்தர்பாளையம், (கொருக்குப்பேட்டை),

வியாசர்பாடி, முத்தமிடிந நகர், (வண்ணாரப்பேட்டை), காசிமேடு, குறுக்கு தெரு, (புது வண்ணாரப்பேட்டை), வீரராகவன் தெரு, (புது வண்ணாரப்பேட்டை), பாலவாக்கம், மடிப்பாக்கம், மேடவாக்கம், உத்தண்டி, சோழிங்கநல்லுhர், மற்றும் ஆதம்பாக்கம். " என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**இந்தியப் பெருங்கடலில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்!**

நியூயார்க்: ஆஸ்திரேலியாவையொட்டியுள்ள இந்திய பெருங்கடலில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.




இந்த நிலநடுக்கமானது ரிக்டர் அளவு கோலில் 7.1 ஆக பதிவானது. நிலநடுக்கத்தால், ஆஸ்திரேலியாவுக்கு சுனாமி அச்சுறுத்தல் எதுவும் இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் குறித்து எந்தத் தகவலும் இல்லை.

தி இந்து
தமிழால் இணைவோம்

**வானிலை முன்னறிவிப்பு: தமிழகம், புதுச்சேரியில் 3 நாட்களுக்கு கனமழை வாய்ப்பு**




***தென்மேற்கு வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளதால் தமிழகம், புதுச்சேரியில் 3 நாட்களுக்கு கனமழை நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.***

***தொடர் மழை காரணமாக சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர் மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு திங்கள்கிழமை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.*** தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை அதிதீவிரம் அடைந்துள்ளது. கடந்த ஆண்டில் 2 காற்றழுத்த தாழ்வு நிலைகள் மட்டுமே வங்கக்கடலில் உருவானது. இதனால், குறைவான மழையே தமிழகத்துக்கு கிடைத்தது. ஆனால், இந்த ஆண்டு கடந்த அக்டோபர் 28 முதல் தற்போது வரை வங்கக்கடலில் 5 காற்றழுத்த தாழ்வுநிலைகள் உருவாகியுள்ளன.

இதன்காரணமாக, தமிழகம் முழுவதும் கடந்த ஒரு மாதமாக கனமழை பெய்து வருகிறது. பெரும்பாலான மாவட்டங்கள் வெள்ளக்காடாக மாறின. சில நாட்களுக்கு முன்பு பெய்த கனமழையால் கடலூர் மாவட்டம் கடுமையாக பாதிக்கப்பட்டது. கடந்த வாரம் பெய்த தொடர் மழையால் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்கள் நிலைகுலைந்தன.

குறிப்பாக, செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து அதிக அளவு தண்ணீர் திறக்கப்பட்டதால் அடையாறு ஆற்றில் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு,

சென்னை மாநகரையே புரட்டிப் போட்டுவிட்டது. வெள்ளம் வடிந்து ஒரு வாரமாகியும் பல இடங்களில் இன்னும் இயல்புநிலை திரும்பவில்லை. சில இடங்களில் வெள்ளம் வடியாமலே உள்ளது. சென்னை, காஞ்சி, திருவள்ளூர், கடலூர் மாவட்டங்களில் நிவாரணப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.




***<u>டிசம்பர் 6 மாலை 6 மணியளவிலான செயற்கைக்கோள் படம். | படம் உதவி: இந்திய வானிலை ஆய்வு மைய இணையதளம்.</u>***

இதற்கிடையே, வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வுப் பகுதி, தாழ்வுப்பகுதியாக வலுப்பெற்றது. ஆனால், அது வலுவிழந்து காற்றழுத்த தாழ்வு நிலையாக குமரிக்கடல் பகுதியில் நிலைகொண்டுள்ளது. இந்நிலையில், புதிய காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளதால் தமிழகத்தில் மீண்டும் கனமழை பெய்யும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து சென்னை மண்டல வானிலை ஆய்வு மைய துணை இயக்குநர் ஜெனரல் பாகுலேயன் தம்பி கூறியதாவது: குமரிக்கடல் பகுதியில் நிலவிவரும் காற்றழுத்த தாழ்வு நிலையுடன், தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில் மேலும் ஒரு புதிய காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளது. இதனால், தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் மழை பெய்து வருகிறது.

புதிய காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 3 நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. கடலோர பகுதிகளில் 6 முதல் 12

செ.மீ. வரை மழை பெய்யக்கூடும். ஒரு சில இடங்களில் கனமழை முதல் அதிகனமழை வரை பெய்யலாம். உள் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யும். புதிய காற்றழுத்த தாழ்வு நிலை, மண்டலமாக வலுப்பெற வாய்ப்பு இல்லை. எனவே, மழையினால் ஏற்படும் சேதங்களை மட்டும் எதிர்பார்க்கலாம். சென்னையில் 6 செ.மீ. மழைக்கு வாய்ப்புள்ளது.

இவ்வாறு ஜெனரல் பாகுலேயன் தெரிவித்தார். ஏற்கெனவே, மழை வெள்ளத்தால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட சென்னை உள்ளிட்ட கடலோர மாவட்ட மக்கள், புதிய காற்றழுத்த தாழ்வுநிலை அறிவிப்பால் அச்சம் அடைந்துள்ளனர். சென்னை, புறநகர் பகுதிகளில் இன்று காலை அரை மணி நேரம் பலத்த மழை பெய்தது. தொடர்ந்து விட்டுவிட்டு மழை பெய்து வருகிறது. இதனால், நிவாரணப் பணிகளை தொடரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை காலை வரையான 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக கடலூர் மாவட்டம் கீழ்ச்சேவை, காட்டுமயிலூரில் 17 செ.மீ. மழை பெய்துள்ளது. செங்கல்பட்டு, மேல்மருவத்தூரில் 16, திருப்பரங்குன்றம் 14, பண்ருட்டி, உத்திரமேரூரில் 13 செ.மீ. மழை பதிவாகியுள்ளது. சென்னை மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளை பொறுத்தவரை, தாம்பரத்தில் 3, தரமணி, செம்பரம்பாக்கம், சென்னை நுங்கம்பாக்கம், மீனம்பாக்கத்தில் தலா 2 செ.மீ. மழை பதிவாகியுள்ளது.

**63 சதவீதம் அதிகம்**

தமிழகத்தில் இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை இயல்பைவிட (44 செ.மீ.) 12 சதவீதம் அதிகமாக இருக்கும் என இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்தது. ஆனால், பருவமழை தொடங்கி 67 நாட்களில், 62 செ.மீ. மழை பெய்துள்ளது. இது, தற்போது வரையான இயல்பை (39 செ.மீ.) காட்டிலும் 63 சதவீதம் அதிகமாகும். இதேபோல, சென்னையில் இதுவரை 158 (இயல்பாக பெய்ய வேண்டியது 68), கடலூரில் 119 (57), காஞ்சிபுரத்தில் 178 (57), நாகை 120 (74), திருவள்ளூர் 143 (51) செ.மீ. மழை பதிவாகியுள்ளது. இன்னும் பருவமழை முடிய 23 நாட்கள் உள்ள நிலையில் மழையின் அளவு மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

**4 மாவட்டங்களுக்கு திங்கள்கிழமை விடுமுறை**

தொடர் மழை காரணமாக சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர் மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு திங்கள்கிழமை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

**கடலூர் மாவட்டத்தில் மீண்டும் கனமழை: 350 கிராமங்களை வெள்ள நீர் சூழ்ந்தது**



கடலூர் மாவட்டத்தில் தொடர்ந்து கனமழை பெய்து வருவதால் மீண்டும் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது. நீர்நிலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுவதால் 350 கிராமங்களில் வெள்ளநீர் சூழ்ந்துள்ளது.

கடலூர் மாவட்டத்தில் கடந்த மாதம் 9-ம் தேதி பெய்த கனமழை யால் சிதம்பரம், பண்ருட்டி, காட்டு மன்னார்கோவில், குறிஞ்சிப்பாடி, குள்ளஞ்சாவடி, வடலூர் பகுதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டன. இதைத் தொடந்து கடந்த வாரம் முதல் பெய்துவரும் பலத்த மழையால் மீண்டும் மாவட்டத்தின் பல பகுதிகள் வெள்ளக்காடாக மாறியுள்ளன. நேற்று முன்தினம் இரவு மாவட்டம் முழுவதும் பலத்த மழை கொட்டியது. நேற்று காலையில் இருந்து மாலை வரை விட்டுவிட்டு கனமழை பெய்தது. நேற்றிரவு விடிய விடிய பலத்த மழை பெய்தது. இதனால் கடலூர், பண்ருட்டி, வடலூர், குறிஞ்சிப்பாடி, சிதம்பரம், புவனகிரி, பரங்கிப்பேட்டை உள் ளிட்ட மாவட்டத்தின் அனைத்து இடங்களிலும் வெள்ளநீர் சூழ்ந் துள்ளது.

**சாலை துண்டிப்பு**

பூ.கொண்டலவாடி, ஊ.நெமிலி, களவானூர், குமாரமங்கலம் உள் ளிட்ட கிராமங்களுக்குள் வெள்ளநீர் புகுந்துள்ளது. கோவிலானூர் ஓடை உடைந்து விருத்தாசலம், வடலூர் பகுதிகளுக்குள் வெள்ளம் புகுந்தது. என்எல்சி சுரங்கத்தில் தேங்கியிருந்த மழை நீரும் வெளி யேற்றப்பட்டது. அத்துடன் உளுந் தூர்பேட்டை பகுதியில் இருந்து வந்த தண்ணீரும் சேர்ந்து பரவ னாற்று ஓடையில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் சென்னை - கும்பகோணம் சாலை யில் இடுப்பளவுக்கு தண்ணீர் செல் கிறது. இதனால் நேற்றிரவு முதல் அந்த வழியாக போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது.

ஏற்கெனவே உடைப்பு ஏற்பட்ட செங்கால் ஓடையில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. அண்ணா நகர் அருகே ஓடையை தாண்டி வெள்ளம் வெளியேறியது. இதனால் அண்ணா நகர், மாருதி நகர், செல்லப்பன் பேட்டை, ராசா குப்பம், எல்லப்பன் பேட்டை, ராஜீவ்காந்தி நகர், ரெட்டிப்பாளை யம், அயர்ன் குறிஞ்சிப்பாடி, கல்குணம், பூதப்பாடி, மருவாய் உள்ளிட்ட கிராமங்களுக்குள் தண் ணீர் புகுந்தது. இதனால் ஆயிரக் கணக்கான கிராம மக்கள் உட னடியாக அப்புறப்படுத்தப்பட்டனர். அவர்கள் அருகில் உள்ள பள்ளிகள், திருமண மண்டபங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

**வெள்ளத்தில் சிக்கியவர்கள் மீட்பு**

மாருதி நகரில் வெள்ளத்தில் சிக்கிய 23 பேரை தீயணைப்பு படையினர் படகில் சென்று மீட்டனர். பண்ருட்டி மேலிருப்பு கிராமத்தில் ஓடை உடைந்து சேமக்கோட்டை, கொளப்பாக்கம் கிராமங்களுக்குள் தண்ணீர் புகுந்தது. பெண்ணாடம் அருகே ஓ.கீரனூரில் பெரிய ஏரி உடைந்து ஊருக்குள் தண்ணீர் புகுந்தது. இதனால் அப்பகுதியை சேர்ந்த 500-க்கும் மேற்பட்டோர் வெள்ளத்தில் சிக்கினர். அவர்களை மீட்பு படையினர் மீட்டனர்.

விருத்தாசலம் அருகே உள்ள மூப்பனார் ஏரி நிரம்பி வழிகிறது. அந்த தண்ணீருடன் நெய்வேலி சுரங்க தண்ணீரும் சேர்ந்ததால் செம்பலாக்குறிச்சி, சித்தேரிகுப்பம் சுரங்கப்பாதை தண்ணீரில் மூழ்கியது. இதனால் அப்பகுதியில் கிராமங்கள் துண்டிக்கப்பட்டுள்ளன. தென்பெண்ணை ஆற்றில் பெருக்கெடுத்து ஓடும் வெள்ளம் காரணமாக கடலூர் அருகே உள்ள வெள்ளப்பாக்கம் கிராமத்துக்குள் தண்ணீர் புகுந்துள்ளது. நேற்று பெய்த கனமழையால்

மாவட்டத்தில் 350-க்கும் மேற்பட்ட கிராமங்களில் வெள்ள நீர் புகுந்துள்ளது. 25 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து மேடான பகுதிகளுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். அனைவருக்கும் மாவட்ட நிர்வாகம் சார்பில் உணவு வழங்கப்பட்டு வருகிறது. பெருமாள் ஏரியும் நிரம்பி வருகிறது. வீராணம் ஏரியில் இருந்து தண்ணீர் வெளி யேற்றப்படுகிறது. வெள்ளாற்றில் அதிகளவு தண்ணீர் செல்கிறது. கடலூரில் அனைத்து நகர்களும் தண்ணீரில் மிதக்கின்றன. தொடர் மழை அறிவிப்பையடுத்து மீட்புப் பணிகளில் ஈடுபட ராணுவத்தினர் 180 பேர் கடலூர் வந்துள்ளனர்.

சிதம்பரம், காட்டுமன்னார் கோவில், புவனகிரி, சேத்தியாத் தோப்பு உள்ளிட்ட பகுதிகள் பலத்தமழை பெய்து வருவதால் குடியிருப்புகளில் தண்ணீர் புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து கனமழை பெய்தால் கடலூர் மாவட்டம் வெள்ளநீரில் மிதக்கும் நிலை ஏற்படும் என்ற அச்சத்தில் மக்கள் உள்ளனர்.

மாலை மலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

**செம்பரம்பாக்கம், புழல், பூண்டி ஏரிகளில் தண்ணீர் திறப்பு அதிகரிப்பு**



சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் பெய்த கன மழையால் ஏரிகள் அனைத்தும் நிரம்பி வழிகிறது. தொடர்ந்து ஏரிகளுக்கு நீர்வரத்து அதிக அளவு உள்ளதால் உபரிநீர் திறப்பு அதிகரித்து உள்ளது.

செம்பரம்பாக்கம் ஏரியில் நேற்று 3 ஆயிரம் கனஅடி திறக்கப்பட்டது. நேற்று மாலை பெரும்பாலான இடங்களில் கனமழை பெய்ததால் ஏரிக்கு நீர்வரத்து

அதிகமானது. இதையடுத்து உபரிநீர் திறப்பு 4 ஆயிரம் கனஅடியாக உயர்த்தப்பட்டது. இதனால் அடையாறு ஆற்றில் கூடுதல் தண்ணீர் செல்கிறது. இன்று காலை நிலவரப்படி ஏரிக்கு 3167 கனஅடி தண்ணீர் வருகிறது. நீர் இருப்பு 3035 மில்லியன் கனஅடியாக உள்ளது.

புழல் ஏரியில் 2880 மில்லியன் கனஅடி தண்ணீர் இருப்பு உள்ளது. 1665 கன அடி நீர் வந்து கொண்டு இருக்கிறது. தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்ததால் ஏரியில் இருந்து 1850 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளது. நேற்று 1150 கனஅடி வெளியேற்றப்பட்டது. கூடுதல் தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளதால் ஆமுல்லைவாயில், செங்குன்றம் கரையோரத்தில் அதிக அளவு தண்ணீர் செல்கிறது.

பூண்டி ஏரிக்கு 3811 கனஅடி தண்ணீர் வருகிறது. ஏரியில் இருந்து 10 ஆயிரத்து 200 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால் கொசஸ்தலை ஆற்றில் வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. ஏரியில் தண்ணீர் இருப்பு 2323 மில்லியன் கனஅடியாக உள்ளது. சோழவரம் ஏரியில் 790 மில்லியன் கனஅடி தண்ணீர் இருப்பு உள்ளது. 720 கனஅடி தண்ணீர் வருகிறது. 400 கனஅடி திறக்கப்பட்டு இருக்கிறது. செம்பரம்பாக்கம், புழல், பூண்டி ஏரிகளில் தண்ணீர் திறப்பு அதிகரித்து உள்ளதால் கரையோர மக்கள் மீண்டும் கலக்கத்தில் உள்ளனர். அவ்வப்போது பெய்து வரும் மழையும் பொது மக்களை மிரள வைத்துள்ளது.

**மழை வெள்ளத்தால் சான்றிதழ் தொலைத்தவர்களுக்கு கட்டணம் இன்றி சான்றிதழ்: சென்னை பல்கலைக்கழகம் அறிவிப்பு**



சென்னை பல்கலைக்கழகத்திலும், அதன் அங்கீகாரம் பெற்ற கல்லூரிகளிலும் படித்த முன்னாள் மாணவ-மாணவிகளின் சான்றிதழ் மழை வெள்ளத்தால் தொலைந்தால் அல்லது சேதம் அடைந்தால் அவர்களுக்கு கட்டணம் இன்றி சான்றிதழ் வழங்கப்படும். ஆனால் அவர்கள் அந்தப்பகுதியில் உள்ள கவுன்சிலரிடம் அல்லது கிராம நிர்வாக அதிகாரியிடம் கையொப்பம் பெற்று போலீஸ் அதிகாரியிடமும் சான்று பெற்று சென்னை பல்கலைக்கழகத்தில் விண்ணப்பிக்கவேண்டும். இந்த தகவலை சென்னை பல்கலைக்கழக துணைவேந்தர் ஆர்.தாண்டவன் தெரிவித்துள்ளார்.

## 141.70 அடியை எட்டிய நீர் மட்டம்: முல்லைப் பெரியாறு அணையில் கூடுதல் தண்ணீர் திறப்பு



தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டத்தில் உள்ள விளைநிலங்களின் பாசனத்திற்கு உயிர் நாடியாக இருப்பது முல்லைப் பெரியாறு அணை. தமிழக அரசுக்கு சொந்தமான இந்த அணையின் நீர் பிடிப்பு பகுதியில் கடந்த 1 மாதமாக கன மழை பெய்து வருகிறது.

எனவே 117 அடியாக இருந்த நீர் மட்டம் படிப்படியாக உயர்ந்து இன்று காலை 141.70 அடியை எட்டியது. சுப்ரீம் கோர்ட்டு உத்தரவுப்படி அணையில் 142 அடி தண்ணீர் மட்டுமே தேக்க அனுமதி உள்ளது. எனவே இன்று மாலைக்குள் அணையின் நீர் மட்டம் 142 அடியை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக தமிழக பொதுப்பணித்துறை அதிகாரிகள் அணைப்பகுதியில் முகாமிட்டுள்ளனர். அதோடு கண்காணிப்பு குழுவினரும் அங்கு தங்கியிருந்து அணையின் நீர் வரத்து, மழை விபரம், நீர் திறப்பு ஆகியவற்றை ஆய்வு செய்து வருகின்றனர். நேற்றும் நீர் பிடிப்பு பகுதியில் கன மழை பெய்ததால் அணைக்கு

இன்று 2,696 கன அடி நீர் வருகிறது. எனவே அணையின் நீர் கேரள பகுதிக்கு வெளியேறாமல் இருப்பதற்காக கூடுதல் தண்ணீர் திறக்க உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி 1,406 கன அடி நீர் திறந்து விடப்படுகிறது நேற்று 511 கன அடி நீர் மட்டுமே திறந்து விடப்பட்டது. கூடுதல் தண்ணீர் திறப்பு காரணமாக பெரியாறு பகுதி லோயர் கேம்ப், உத்தமபாளையம், கம்பம் பகுதிக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

இதே போல் இடுக்கி மாவட்டத்தில் உள்ள வண்டி பெரியாறு, பீர்மேடு, வல்லக்கடவு உள்ளிட்ட பகுதிகளிலும் வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. தண்ணீர் திறக்கப்படும் அளவை பொறுத்து லோயர் கேம்ப் மின் உற்பத்தி நிலையத்தில் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும். நேற்று வரை ஒரு ஜெனரேட்டர் மட்டுமே இயங்கியது. இதன் மூலம் 32 மெகாவாட் மின்சாரம் உற்பத்தியானது. இன்று கூடுதல் தண்ணீர் திறக்கப்பட்டதால் 3 ஜெனரேட்டர்கள் இயக்கப்பட்டது. இதன் மூலம் 96 மெகாவாட் மின்சாரம் இன்று உற்பத்தியானது. பெரியாறு அணையில் திறக்கப்படும் தண்ணீர் வைகை அணைக்கு வந்து சேர்கிறது. வைகை அணையின் நீர் பிடிப்பு பகுதியான மூல வைகை பகுதியில் நேற்று விடிய விடிய கன மழை பெய்தது. இதனால் அணைக்கு நீர் வரத்து அதிகரித்தது. அணையின் நீர் மட்டம் 64.73 அடியாக உள்ளது. அணைக்கு 2,955 கன அடி நீர் வருகிறது. நேற்று வரை வைகை அணையில் பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு குறைக்கப்பட்டிருந்தது. தற்போது தண்ணீர் வரத்து அதிகரிப்பு காரணமாக சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்ட பாசனத்திற்காக கூடுதலாக 4,060 கன அடி நீர் திறந்து விடப்படுகிறது. அதிகளவு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால் ஆண்டிப்பட்டி, மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்ட வைகை ஆற்று கரையோர பகுதியில் வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. ஆற்றில் யாரும் இறங்கி குளிக்க வேண்டாம் என தண்டோரா மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சோத்துப்பாறை அணையின் நீர் மட்டம் 126.28 அடியாக உள்ளது. அணைக்கு வரும் 150 கன அடி நீர் அப்படியே திறந்து விடப்படுகிறது. மஞ்சளாறு அணை நீர் மட்டம் 56.50 அடியாக உள்ளது. அணைக்கு வரும் 149 கன அடி நீர் அப்படியே திறந்து விடப்படுகிறது. மழை அளவு விபரம் மில்லி மீட்டரில் வருமாறு:– பெரியாறு 4.2, தேக்கடி 3, கூடலூர் 3, சண்முகாநதி அணை 5, உத்தமபாளையம் 7, வீரபாண்டி 10, வைகை அணை 22, மஞ்சளாறு அணை 3,

சோத்துப்பாறை அணை 7, மருதாநதி அணை 35, கொடைக்கானல் 15.6. தொடர்ந்து மழை பெய்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்

**கோவையில் மீண்டும் மழை வேகமாக நிரம்பும் அணைகள்**



கோவையில் வடகிழக்கு பருவமழை நேற்று பரவலாக பெய்தது. மாவட்டத்தில் ஆங்காங்கே இரவில் சில பகுதிகளில் கனமழை இருந்தது. இதன் காரணமாக அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து காணப்பட்டது.

ஆழியாறு அணை தனது முழு கொள்ளவான 120 அடியை எட்டியுள்ளது. தற்போது அணையில் 119.50 அடிக்கு தண்ணீர் உள்ளது. வினாடிக்கு 991 கனஅடி தண்ணீர் அணைக்கு வந்து கொண்டிருக்கிறது. அணையின் பாதுகாப்பு கருதி அணையில் இருந்து வினாடிக்கு 668 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இதேபோல் 72 அடி கொண்ட பரம்பிக்குளம் அணையில் தற்போது 56 அடிக்கு தண்ணீர் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 785 கனஅடி தண்ணீர் வரத்து உள்ளது. அணையில் இருந்து 613 கனஅடி வெளியேற்றப்பட்டு வருகிறது. 160 அடி கொண்ட சோலையாறு அணையில் தற்போது 76.69 அடி தண்ணீர் உள்ளது. அணைக்கு 301 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. அணையில் இருந்து வினாடிக்கு 767 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. 60 அடி கொண்ட திருமூர்த்தி அணையில் தற்போது 47.96 அடி தண்ணீர் உள்ளது. அணைக்கு 1539 கனஅடி தண்ணீர் வருகிறது. அணையில் இருந்து வினாடிக்கு 895 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

**டெல்டா மாவட்டங்களில் மழை: திருவாரூரில் பள்ளி–கல்லூரிகளுக்கு விடுமுறை**



தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமாக பெய்து வருகிறது. இந்தநிலையில் வங்ககடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக பல மாவட்டங்களில் பலத்த மழை பெய்து வருகிறது.தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களிலும் கடந்த ஒரு வாரமாக மழை பெய்து வருகிறது. தஞ்சையில் நேற்று பகலில் விட்டு விட்டு மழை பெய்தது. இரவும் மழை பெய்தது. இன்று காலை மேகமூட்டமாக இருந்தது. மாவட்டத்தின் சில பகுதிகளில் இன்று காலை மழை பெய்தது. தஞ்சாவூர், பூதலூர், பேராவூரணி, அணைக்கரை, கும்பகோணம், பாபநாசம், திருக்காட்டுப்பள்ளி, ஒரத்தநாடு ஆகிய இடங்களில் நேற்று மழை பெய்தது. தொடர்மழை காரணமாக தஞ்சை அருகே உள்ள ராமாபுரத்தை சேர்ந்த ராஜேஷ் என்பவர் வீடு நேற்று மதியம் இடிந்து விழுந்தது. அப்போது வெந்நீர் வைக்கப்பட்டிருந்த பாத்தி ரத்தில் கற்கள் விழுந்ததால் வெந்நீர் தெறித்து ராஜேஷின் மகன் சரத்குமார் (வயது16) காயம் அடைந்தார். அவர் உடனே மீட்கப்பட்டு தஞ்சை மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மழை காரணமாக மாவட்டம் முழுவதும் ஆயிரக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்பட்ட சம்பா பயிர்கள் தண்ணீரில் மூழ்கி உள்ளன. மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

அதிராம்பட்டினம், தம்பிக் கோட்டை, ஏரிப்புறக்கரை ஆகிய இடங்களில் உப்பளத் தொழில் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளது.2 ஆயிரம் ஏக்கரில் உள்ள உப்பளங்கள் மழை வெள்ளத்தில் மூழ்கி உள்ளன. கடல் சீற்றம் காரணமாக 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடிக்க செல்லவில்லை.

திருவாரூர் மாவட்டத்தில் நேற்று மழை பெய்தது. இன்றும் மழை பெய்து வருகிறது. அங்கு தொடர்மழை பெய்து வருவதால் வீடுகளையும், வயல்களையும் மழைநீர் சூழ்ந்துள்ளது. முத்துப்பேட்டை, மன்னார்குடி, குடவாசல், நீடாமங்கலம், திருத்துறைப் பூண்டி, வலங்கைமான், நன்னிலம் ஆகிய இடங்களில் நேற்று பலத்த மழை பெய்தது. இதனால் பொதுமக்களின் இயல்புவாழ்க்கை பாதிக்கப்பட்டது. தொடர்ந்து மழை பெய்து வருவதால் பள்ளி–கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

நாகை மாவட்டத்தில் நேற்று முதல் தொடர்மழை பெய்து வருகிறது. இன்றும் மழை பெய்தது. மீனவர் குடியிருப்புகளை மழை வெள்ளம் சூழ்ந்துள்ளது. இதனால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பு மையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். சீர்காழியில் நேற்று பகலில் மழை இல்லை. மாலை முதல் மழை பெய்து வருகிறது. இதனால் குடியிருப்புகளை மழை வெள்ளம் சூழ்ந்துள்ளது. தொடர்ந்து மழைபெய்து வருவதால் வெள்ளத்தை வடியவைக்க முடியவில்லை. சீர்காழி தாலுகாவில் 11 இடங்களில் பாதுகாப்பு மையங்கள் அமைக்கப்பட்டு சுமார் 5 ஆயிரம் பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். குன்னம், வேட்டங்குடி, வேம்படி, தாண்டவன்குளம், சென்னாம்பட்டினம், அன்னப்பன் பேட்டை, தாலம் தொண்டி ஆகிய இடங்களில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். சீர்காழி பகுதியில் 800–க்கும் மேற்பட்ட வீடுகள் மழையால் இடிந்து சேதமடைந்துள்ளன. இதில் 424 வீடுகளுக்கு நிவாரண உதவி வழங்கப்பட்டுள்ளது. மேலும் 120 கால்நடைகள் பலியாகி உள்ளது. கிராம நிர்வாக அலுவலர்கள் வேலைநிறுத்தம் காரணமாக மழைவெள்ளசேத கணக்கெடுக்கும்பணி பாதிக்கப்பட்டு இருந்தது. இப்போராட்டம் கைவிடப்பட்டதை தொடர்ந்து இன்றுமுதல் மீண்டும் மழைவெள்ளசேத கணக்கெடுப்பு பணி தொடங்கியுள்ளது. சீர்காழி, கொள்ளிடம், பழையபாளையம், ஆச்சாள்புரம், நல்லூர், ஆர்ப்பாக்கம், ஆரப்பள்ளம், கோபாலசமுத்திரம், புத்தூர், அரசூர், வைத்தீஸ்வரன் கோவில், காரைமேடு, கொண்டல், வள்ளுவக்குடி, எடமணல் உள்பட 50–க்கும் மேற்பட்ட கிராமங்களில் 12 ஆயிரம் ஏக்கரில் நடவுசெய்யப்பட்ட சம்பா பயிர்கள் மழைவெள்ளத்தில் மூழ்கி உள்ளன. இதனால் விவசாயிகள் கவலையடைந்து உள்ளனர். சீர்காழி பகுதியில் நேற்று மட்டும் 45 வீடுகள் இடிந்து சேதமாகின.

தரங்கம்பாடியில் டேனிஷ் கோட்டை உட்புறச்சுவர் இடிந்து விழுந்தது. சுனாமிக்கு தாக்குப்பிடித்த இந்த சுவர் தற்போது பெய்துவரும் தொடர்மழைக்கு இடிந்து விழுந்துள்ளது குறிப்பிடத்தக்கது. மயிலாடுதுறை, வேதாரண்யம் ஆகிய பகுதிகளிலும் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் மீனவர்கள் ஆழ்கடலுக்கு மீன்பிடிக்க செல்லாமல் அருகிலேயே மீன்பிடித்து விட்டு திரும்புகின்றனர். நாகை மாவட்டத்தில் தொடர் மழை பெய்து வருவதால் பள்ளி–கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை விடப் பட்டுள்ளது.

தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் 24 மணி நேரத்தில் பெய்த மழைஅளவு (மில்லிமீட்டரில்) வருமாறு:– தஞ்சாவூர் – 40

வேதாரண்யம் – 42

**மலை பகுதியில் கனமழை நீடிப்பு: பாபநாசம் அணையில் இருந்து 8500 கன அடி தண்ணீர் திறப்பு**



வடகிழக்கு பருவமழை காரணமாக தமிழகம் முழுவதும் கடந்த ஒரு மாதமாக கனமழை பெய்து வருகிறது. வங்க கடலில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வு மண்டலத்தால் சென்னை, கடலூர் பகுதிகளில் கனமழை கொட்டியது.

இதனால் வரலாறு காணாத அளவு வெள்ள சேதம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் தென்மேற்கு வங்க கடலில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது. ஏற்கனவே பெய்த மழையினால் நெல்லை மாவட்டத்தில் உள்ள அணைகள், குளங்கள் நிரம்பி வருகின்றன. மொத்தம் உள்ள 11 அணைகளில் மணிமுத்தாறு, வடக்கு பச்சையாறு ஆகிய 2 அணைகள் தவிர பாபநாசம்,

சேர்வலாறு, கடனா, நாமநதி, கருப்பாநதி, குண்டாறு, நம்பியாறு, கொடுமுடியாறு, அடவிநயினார் ஆகிய 9 அணைகள் நிரம்பியுள்ளன.

அணைகளில் இருந்து உபரிநீர் ஆற்றில் திறந்து விடப்பட்டது. இதனால் தாமிரபரணி ஆறு, சிற்றாறு, நிச்சேப நதி, நம்பியாறு உள்ளிட்ட ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. தாமிரபரணி ஆற்றில் கடந்த 4 நாட்களாக வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இன்று 5–வது நாளாக ஆற்றில் வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. இதனிடையே முழு கொள்ளளவை எட்டிய பாபநாசம், கடனா, ராமநதி, கடனாநதி ஆகிய அணை பகுதிகளில் கடந்த 2 நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இதனால் அணைகளுக்கு வரும் தண்ணீர் மற்றும் உபரி நீர் ஆற்றில் திறந்து விடப்பட்டுள்ளது. பாபநாசம் அணை பகுதியில் நேற்றிரவு 62 மில்லி மீட்டர் மழை பெய்தது. இதனால் அணைக்கு வினாடிக்கு 4 ஆயிரத்து 229 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. ஏற்கனவே, அணை நிரம்பிய தால் அணையில் இருந்து நேற்று உபரியாக 2 ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டது. பின்னர் இது 3 ஆயிரமாக அதிகரிக்கப்பட்டது. தொடர்ந்து மழை பெய்வதால் நள்ளிரவு அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீர் 5 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டது. இன்று காலை 6.30 மணி யளவில் 6 ஆயிரத்து 200 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டது.

காலையிலும் கனமழை பெய்ததால் 7.40 மணியளவில் திறந்து விடப்படும் அளவு 8 ஆயிரத்து 500 கன அடியாக அதிகரிக்கப்பட்டது. இதே போல கடனா, ராமநதி அணைகளில் இருந்தும் உபரி நீர் அதிகளவில் திறக்கப் பட்டன. இதன் காரணமாக தாமிரபரணியில் அகோர வெள்ளம் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் கரையோர பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். ஆற்றின் கரையோர பகுதிகளையும், அணை நிலவரத்தையும் மாவட்ட உயர் அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர். குளங்கள், கால்வாய்களில் உடைப்பு ஏற்படாமல் தடுக்க வருவாய் துறை மற்றும் பொதுப்பணி துறையினர் தீவிர நடவடிக்கையில் இறங்கியுள்ளார்கள். தீயணைப்பு படையினர் நவீன உபகரணங்களுடன் தயார் நிலையில் உள்ளனர். போலீசாரும் கரையோர பகுதி மக்களுக்கு எச்சரிக்கை விடுத்து வருகிறார்கள். 118 அடி கொள்ளளவு கொண்ட மணிமுத்தாறு அணை வேகமாக நிரம்பி வருகிறது. நேற்று இந்த அணையின் நீர்மட்டம் 94.20 அடியாக இருந்தது. இரவு பெய்த மழையினால் ஒரே நாளில்

இந்த அணை நீர்மட்டம் 3 அடி உயர்ந்து 97.80 அடியாக அதிகரித்துள்ளது. அணைக்கு 3 ஆயிரத்து 533 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

அணையில் இருந்து தண்ணீர் வெளியேற்றப்படவில்லை. இதே போல 50 அடி கொள்ளளவு கொண்ட வடக்கு பச்சையாறு அணையும் நிரம்பி வருகிறது. நேற்று இந்த அணையின் நீர்மட்டம் 42.50 அடியாக இருந்தது. இன்று இது 44 அடியாக அதிகரித்தது. அணைகள் குளங்கள் நிரம்பியது விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தினாலும் தொடர்ந்து பெய்து வரும் மழையினால் ஆறு, கால்வாய்களில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.